மலர்-4 இதழ்-77 நவம்பர் 1-15 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




இலவச
e- book

# உழைப்பிற்கு கூலியாக மாறிய பன்னீர் இலை விபூதி



# கோபம் தீர்க்கும் விநாயகர்

வீடுகளில் குழந்தைகள் முதற்கொண்டு, பெரியவர்கள் வரை, யாராவது ஒருவர் மிகுந்த கோபக்காரராக இருப்பார். இந்த கோபத்தை போக்க திருவானைக்கா கோவிலில் உள்ள விநாயகர் உதவி செய்கிறார்.

திருவானைக்காவில் எழுந்தருளியுள்ள அகிலாண்டேஸ்வரி தேவி மிகவும் உக்கிரமாக விளங்கினாள்.

தேவியின் உக்கிரத்தைத் தணித்து மக்களுக்கு அருள்பாலிக்க ஆதிசங்கரர் தேவியின் சந்நிதிக்கு நேர் எதிரே ஒரு விநாயகப் பெருமானை பிரதிஷ்டை செய்தார். அதனால் தேவியின் உக்கிரம் குறைந்து சாந்த வடிவினளாய் ஆனாள்.

எனவே இந்த விநாயகரை "உக்கிரம் தவிர்த்த விநாயகர்" என்றழைத்து வணங்குகின்றனர்.

இந்த விநாயகரை கோபம் உள்ளவர்கள் குடும்பத்துடன் வணங்கினால், கோபம் குறைந்து சாந்தம் பிறக்கும்.

# பாம்பு தீண்டா கோவில்

குடவாசல் அருகேயுள்ள திருப்பாம்புரம் திருக்கோயில் உள்ளது. இத்திருத்தலம் ராகு கேது தலமாக விளங்குகிறது. இத்தலத்து சிவபெருமானை ஆதிசேஷன் தலைமையில் நாகங்கள் வழிபட்டதாக கூறப்படுகிறது. இன்றும் இத்தலத்தில் பாம்புகள் உலா வருவ தாக கூறப்படுகிறது. ஒவ்வொரு நாகமும் சிவனடியார்களாக போற்றப்படுகிறது. இத்தலத்து நாகங்கள் பக்தர்களை தீண்டுவதில்லை என்று பக்தர்கள் தெரிவிற்கின்றனர். சில நேரங்களில் இத்தலத்து இறைவன் திருமேனி மீது நாகங்கள் தோலுரித்து மாலையாக விட்டுச் செல்வது அடிக்கடி நிகழ்கிறது.






# அனுமனை காக்கும் பெருமாள்

காஞ்சிபுரம் அடுத்த அய்யங்கார்குளம் சஞ்சீவிராயர் திருக்கோயில் குளக்கரை 1000 ஆண்டுகள் பழமையான ஸ்ரீனிவாச பெருமாளுடன், கருடாழ்வார், நாரத முனிவர் இவர்களுடன் விசேஷமாக காட்சி தரும் அன்னமாச்சார்யார் சிலைகள் வெட்ட வெளியில் உள்ளது.

கோயிலின் கருவறையில் உள்ள ஆஞ்சநேயருக்கு பாதுகாப்பாக மேற்கண்ட மூர்த்திகள் உள்ளனர் என்பது கூடுதல் சிறப்பாகும்.

பெருமாளுக்கு பாதுகாப்பாக அனுமன் இருந்துதான் பார்த்திருப்போம், ஆனால் இங்கு அனுமனுக்கு பாதுகாப்பாக பெருமாளே உள்ளார்.



# வித்தியாசமான நவகிரக சன்னதி

காஞ்சிபுரம் வரதராஜபெருமாள் கோவிலில் உள்ளது போன்று பல்லி தோஷ நிவர்த்தி தலமாக சேலம் சுகவனேஸ்வரர் ஆலயமும் விளங்குகிறது.

இத்தலத்து நவக்கிரக சன்னிதியின் மேற்கூரையில் பல்லி, உடும்பு போன்ற உருவங்கள் காணப்படுகின்றன. இதனால் இத்தலத்தில் வழிபட்டால் பல்லி தோஷம், விஷ ஜந்துக்களினால் ஏற்படும் நோய்கள் குணமாகும் என்று கூறப்படுகிறது.

இந்த ஆலயத்தில் நவக்கிரக சன்னதியில் உள்ள ராகுவும், செவ்வாயும் இடம் மாறி உள்ளனர். இதுபோன்று வேறு எந்த திருத்தலத்திலும் இடம் மாறியது காட்சியளிப்பது இல்லை.



# விளைச்சல் தரும் விநாயகர்

விவசாயத்தை செழிப்பாக்கும் விநாயகராக திகழ்கிறார் கொத்தள விநாயர், திருவண்ணாமலை மாவட்டம் நார்த்தாம் பூண்டி வேலூர் சாலையில் சுமார் 18 கி.மீ. தொலைவில் உள்ள நாயுடுமங்கலம் கூட்ரோடு. அங்கிருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ள நார்த்தாம்பூண்டி கைலாசநாதர் கோயிலின் வெளிப்பிராகாரத்தில் கொத்தள விநாயகர் என்ற திருநாமத்தில் இந்த விநாயகர் அருள்புரிகிறார்.



இந்த ஊரை ஆட்சி செய்த மன்னனின் கோட்டை கொத்தளங்களைக் காத்தருளியதால், இந்த விநாயகருக்கு சந்நதி அமைத்து வழிபட்டார்.

இவ்வூர் மற்றும் சுற்றுவட்டாரத்தை சேர்ந்தவர்கள் இந்த விநாயகரை வணங்கி விட்டு நிலத்தில் நெல் விதைத்தால் அந்த முறை அதிகமான விளைச்சல் உறுதி என நம்புகின்றனர். அவர்களின் நம்பிக்கையை மெய்ப்பிக்கும் வகையில், விளைச்சலும் செழிப்பதால் இந்த விநாயகரை விளைச்சல் விநாயகர் என்று போற்றுகின்றனர்.

# பல்லாண்டு பல்லாண்டு பாசுரம் தோன்றிய வரலாறு

பெருமாளுக்கு உகந்த காவியங்கள், பாடல்கள் என்று பற்பல இருந்தாலும், மிக முக்கிய மானதாக விளங்குவது "திருப்பல்லாண்டு பாசுரம்" தான்.

புரட்டாசி மாதம் திருப்பல்லாண்டு பாடாத பெருமாள் கோவில்களே கிடையாது.

இந்த பாசுரம் பெருமாளை மட்டுமின்றி இலட்சுமிதாயாரையும் வாழ்த்திப் பாடப்பட்ட தாகும்.

பணம், செல்வம் இழப்பு ஏற்பட்டவர்களும், செல்வம் சேர்க்க விழைபவர்களும், அவசியம் இந்தப் பாசுரத்தை படித்தால் மிகுந்த பலன் கிடைக்கும்.

இது இந்து மதத்தில் வைணவ சமயத்தின் ஓர் ஆதாரமாக, தமிழ்மறையாக கொண்டாடப் படுகிறது.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டுக்குள் வைணவ சமயத்தில் ஆழ் வார்கள் 12 பேரினால் இயற்றப்பட்ட இந்த பாடல்களை, 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாதமுனிகள் என்பார் ஆழ்வார்கள் அருளிச் செயல்கள் எனத் தொகுத்தார்.

பின்னர் வந்த மணவாளமாமுனிகள், நாதமுனிகள் தொகுத்த ஆழ்வார்களின் பிரபந் தத்தோடு, திருவரங்கத்தமுதனார் செய்த இராமானுச நூற்றந்தாதியும் சேர்த்து நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என அழைக்கும்படி அருளி னார்.

திவ்ய எனும் சொல் "மேலான"என்றும் பிரபந்தம் எனும் சொல் பலவகை பாடல் தொகுப் பினையும் குறிக்கும்.

இந்த நூல் ஆன்ற தமிழ் மறை, ஐந்தாவது வேதம், திராவிட வேதம், திராவிட பிரபந்தம் என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டுள்ளது. தமிழ்



பேசும் வைணவர்கள் மட்டுமல்லாது தெலுங்கு, கன்னடம் பேசும் வைணவர்களாலும் இன்றும் தினமும் படிக்கப்பட்டு வருகிறது என்பது இதன் சிறப்பு.

ஒரு சமயம் பாண்டிய மன்னன் வல்லப தேவன் இரவு, நகர் வலம் சென்றான்.

ஒரு வீட்டுத் திண்ணையில் முதியவர் ஒருவர் படுத்திருப்பதைக் கண்டான். அவரருகே சென்று எழுப்பி, "பெரியவரே, தாங்கள் யார்?" என வினவினான்.

"நான் புனித கங்கையில் நீராடிவிட்டு, சேதுக்கரைக்குச் சென்று கொண்டிருக்கிறேன்," என்றார் முதியவர்.

"ஓ... அப்படியா ? மிக்க மகிழ்ச்சி. தெய்வீக பற்றுடைய தாங்கள் ஏதாவது சசுலோகம் சொன் னால் நன்றாக இருக்கும்," என்றான் மன்னன்.

முதியவர் சுலோகமும் சொல்லி அதற்கான பொருளையும் சொன்னார்.

"மழைக் காலமான ஆடி முதல் ஐப்பசி வரை இன்பமாய் வாழ, மற்ற எட்டு மாதத்திலும் உழைக்க வேண்டும்.

இரவுக்குத் தேவையானதை பகலிலும், முதுமைக்குத் தேவையானதை இளமையிலும் தேட வேண்டும்.

அதே போல அடுத்த பிறவிக்கு வேண்டியதை இப்பிறவியிலேயே தேட வேண்டியது அவசியம்," என்றார் முதியவர்.

அவரை வணங்கி வழியனுப்பி வைத்த மன்னன். முதியவர் சொன்ன முதல் மூன்று விச யங்களை முடித்து விட்டேன்.

**அடுத்த பிறவிக்கு வேண்டியதை இப்பிறவியிலேயே தேடுதல் என்றால் என்ன...!!** என்று குழம்பியவாறே, அரண் மனைக்குச் சென்றான்.

மறுநாள் குலகுரு செல்வ நம்பியையும், பண்டிதப் பெருமக்கள் பலரையும் அழைத்து , இது குறித்து விசாரித்த போது யாரும், மன்னனின் சந்தேகத்தைப் போக்க இயலவில்லை.

மன்னன் ஒரு மூங்கிலின் உச்சியில் ஒரு பொற்காசு முடிப்பைக் கட்டி ,அரண்மனை வாசலில் நடுமாறும், மன்னனின் சந்தேகத்தை தெளிவுறச் செய்வோர்களுக்கு இந்தப் பொற்காசுகள் அடங்கிய முடிச்சு இலவசம் என்றும் அறிவிக்கச் செய்தான்.

அன்றைய இரவில் ஸ்ரீவில்லிபுத்தூர் பெரியாழ்வார் கனவில் பெருமாள் தோன்றி," பரம்பொருளைத் தொழுது அருளைப் பெறுதலே ,அடுத்த பிறவிக்கான தேவை," என்று சொல்லி மன்னன் சந்தேகம் போக்கும்படி கூறி மறைந் தார்.

பெரியாழ்வாரும் அதன்படியே அரண்மனை யருகே வந்து, வாசலில் மூங்கில் மரமருகே நின்றபடி, வல்லப தேவனை அழைத்து,



"மன்னா,! நாராயணனே பரம்பொருள், இப் பிறவியில் அவரை வணங்கி அருள் பெறுதலே அடுத்தபிறவிக்கான தேடல் ஆகும்," என்று சொல்லி முடிக்கும் தறுவாயில் மூங்கில் மரம் வளைந்து, தாழ்ந்து பொற்காசு முடிச்சை நீட்டியது. மன்னனும் ஆச்சரியமடைந்து பெரி யாழ்வாரின் கருத்தை ஏற்றான்.

அதே நேரத்தில் கருட வாகனத்தில் பெருமாளும் காட்சியளித்தார். அப்போது தான் ஆழ்வாரும் திருப்பல்லாண்டு என்ற பாசுரத்தை பாடினார்.

**"பல்லாண்டு பல்லாண்டு**
**பல்லாயி ரத்தாண்டு**
**பலகோடி நூறாயிரம்**
**மல்லாண்ட திண்தோள்**
**மணிவண்ணா! உன்**
**செவ்வடி செவ்விதிருக் காப்பு"**

எனத் தொடங்கும் பாசுரம் பாடினார்.

இந்த பாசுரத்தை பாடினால் செல்வ வளத் துடன் குடும்பம் மகிழ்ச்சியுடன் இருக்கு.


ஆன்மிகமலர் மெயில் புக்
1-15 நவம்பர் 2019 5
www.aanmeegamalar.com

# வாழ்க்கை

தனது குடும்பம் என்ற ஒரு பத்து பேர்,

தனது நண்பனும், பகைவனும் என்ற பத்து பேர்,

தனது தொழிலில் ஒரு பத்து பேர்,

தனது வீதியில் ஒரு பத்து பேர்,

தனது ஜாதியில் ஒரு அறுபது பேர்..!!

இந்த நூறு பேரின் நடுவில்

தன்னை உயர்த்திக் காட்டிக் கொள்வதும்,. பாசமாக, நட்பாக, அன்பாக, வீரனாக, நல்லவனாக காட்டிக் கொள்வதுமே மனித வாழ்வின் குறிக்கோள் என்று இந்த சமுதாயம் மனிதர்களுக்கு போதிக்கிறது.

எல்லாவற்றையும் மற்றவரோடு ஒப்பிட்டு அதைவிட ஒரு படியேனும் அதிகமாக இருக்க வேண்டும் அப்போது தான் மதிப்பு என்று போலியான வாழ்க்கை வாழகட்டாயப்படுத்துகிறது.

அவன் அப்படி, இவன் இப்படி என்று பிறரை விமர்சனம் செய்யச் சொல்கிறது.

பொருளாதார ரீதியாக தன்னிறைவு அடைந்ததும் பிறரை ஏளனமாக, கேவலமாக நினைக்கச் சொல்கிறது.

இந்த நூறு பேரின் நடுவில் ஏற்படும் அவமானமும், கோபமும், கௌரவமும் மட்டுமே ஒருவனைப் பாதிக்கின்றன.

இதற்காக தன்னுடைய அத்தனை ஆசாபாசங்களையும் அடக்கி வைத்து, மனித ஜடமாக வாழும் பலருக்கு இந்த பூமிப் பந்து பலநூறு கோடி மக்களால் ஆனது என்பது தெரிவதில்லை.

என்னுடைய தாத்தாவின் தாத்தா எப்படி இருந்தார் என்பது எனக்குத் தெரியாது!

எப்படி வாழ்ந்தார் என்பது எனக்குத் தெரியாது!!

அவர் நல்லவரா கெட்டவரா எனக்குத் தெரியாது!!

அவர் பெயர் கூட எங்கள் தெருவில் பலருக்குத் தெரியாது, எங்கள் ஊரில் யாருக்கும் தெரியாது!!

இதே நிலை எனக்கும் ஒரு நாள் வரும்!

நான் இந்த பூமியில் வாழ்ந்ததற்கான அடையாளம் அத்தனையும் கால ஓட்டத்தில் மறையும்!!

ஆக எதற்காக இந்த நூறு பேரின் அங்கீகாரத்தை நான் கண்டு கொள்ள வேண்டும்?

யார் இவர்கள்?

என்னுடைய வாழ்க்கையில் யாரெல்லாம் வர வேண்டும், வரக்கூடாது என்பதை தீர்மானிக்க இவர்கள் யார்?

நான் இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு வாழப் போவதில்லை!

அதிகபட்சம் இன்னும் சில ஆண்டுகள்!

அதுவும் வெகு தொலைவில் இல்லை!

சர்வமும் ஒருநாள் அழியும் மனித வாழ்க்கை அற்புதமானது. அழகானது!

தத்தமது வாழ்க்கையை யாரும் போலியாக வீணடித்து விடாதீர்கள் வாழ்க்கை ஒரே ஒரு முறைதான்!

தோற்றால் பரவாயில்லை, ஆனால் பங்கெடுக்காமலேயே அழிந்து விடாதீர்கள்.

நம் தாத்தாவின் தாத்தாவை நாம் பார்த்ததில்லை. அதே போல் நம் பேரனின் பேரனை நாம் பார்க்க இருக்கப் போவதில்லை. இது தான் வாழ்க்கை.

பிறரை வஞ்சிக்காமல், தொந்தரவு செய்யாமல், எவ்வளவு இயலுமோ அவ்வளவு மகிழ்ச்சியாய் வாழ்ந்து விட்டுச் செல்லுங்கள்.

– பொறியாளர் ஆறுமுகம், பெரியகுளம்
போன்: 09952135947



ஆன்மிகமலர் மெயில் புக்



மாதம் தோறும் இரண்டு இதழ்களாக (இ–புக் வடிவில்) வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் நீங்களும் இணைந்து ஆன்மிக சேவையாற்றலாம்....

உங்கள் பகுதியில் உள்ள கோயில்களின் சிறப்புகள், மகான்களின் சிறப்புகள், மற்றும் உங்களுக்கு தெரிந்த ஆன்மிக செய்திகளையும் எங்களுடன் பகிருங்கள்...

30ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆன்மிக அன்பர்கள் படித்து பயன்பெற ஒரு பாலமாக இருப்போம்

மேலும் தகவலுக்கு 8825844033 என்ற வாட்சப் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்

## பற்களை காக்க

# குப்பைகளை விட்டுவிட்டு சித்த வழியை நாடுவோம்



இன்றைய காலக்கட்டத்தில் மருத்துவத் துறை எவ்வளவுக்கு எவ்வளவு நவீன வளர்ச்சி அடைந்தாலும், அந்த அளவிற்கு செலவும் ஆகிவருவது மறுக்க முடியாத உண்மையாகும்.

சாதாரணமாக பல் சொத்தை ஏற்பட்டு, மருத்துவமனை சென்றால் அந்த பல்லுக்கு பதிலாக மாற்று பல் வைப்பதற்கும், சொத்தை ஏற்பட்ட பல்லை அகற்றுவதற்கும் குறைந்தது 5,000 ஆயிரம் முதற்கொண்டு 10,000 ஆயிரம் வரை செலவு செய்ய நேர்ந்தாலும், குறிப்பிட்ட காலத்திற்கு பின் அதே பல்லால் மீண்டும் பிரச்சனைதான் ஏற்படுகிறது.

இன்று குழந்தைகள் முதற்கொண்டு பெரியவர்கள் வரை அனைவருக்கும் மிகுந்த பிரச்சனையாக இருப்பது இந்த பல் பிரச்சனைதான், ஒரு பக்கம் உணவுமுறை மாற்றத்தால் சுவைக்கு அடிமையான நாக்கு, உடலை மட்டுமின்றி பல்லையும் சேர்த்தே சேதப்படுத்துகிறது.

“பல்லுப் போனால் சொல்லுப் போச்சு” என்கிற பழமொழி உணர்த்தும் சொல் என்பது உடல் ஆரோக்கியத்தை என்றே கருத வேண்டும். ஏனெனில் பற்களின் ஆரோக்கியமே உடலின் ஆரோக்கியத்தின் அடையாளம்.

இன்றைக்கு நவீன அறிவியல் பற்களை பராமரிக்கவும், பளிச்சென வைக்கவும் பல்வேறு மருந்து பொருள்களை சந்தைப் படுத்தினாலும் கூட, நமது முன்னோர்கள் நமக்களித்த ஆலும், வேலும் இன்றும் சிறப்பான பல் பராமரிப்பு உத்தியாக இருக்கிறது என்றால் மிகையில்லை.

பற்களை பராமரிப்பது மற்றும் அவற்றில் பழுது உண்டாகி விடுவதை தடுப்பது போன்ற விழிப்புணர்வு நமது முன்னோர்களுக்கு இருந் திருக்கிறது.

அந்த வகையில் செயற்கை பொருட்களைத் தவிர்த்து இயற்கை பொருட்களைக் கொண்டு பற்களை உறுதியாகவும் குறை இன்றியும் பேண ஒருவகையான பற்பொடி ஒன்றை தயாரிக்கும் முறையைதன்வந்திரி தனது “தன்வந்திரி வைத்திய காவியம்” என்னும் நூலில் அருளியிருக்கிறார்.




போச்சப்பா தந்தமென்ற வியாதிக்கப்பா
பொல்லாத அரப்பொடியு மக்கிராகாரம்
நீச்சென்ற படிகாரம் மிருதார் சிங்கு
நோரான லவங்கையிடப் பட்டையப்பா
ஆச்சென்ற காசுக்கட்டி துருசுங்கூட்டி
அப்பனே கணக்காகக் கல்வம் போடு
பாச்சென்ற எலுமிச்சம் பழச்சாற்றாலே
பாங்குபெற நாற்சாம மாட்டு ஆட்டே.
ஆட்டியே நெருங்கவே மடிந்தபின்பு
அப்பனே சீசாவிற் பதனம் பண்ணு
கூட்டியே நான்குநாள் தேய்த்து வந்தால்
குடிலமாம் தந்தஅசைவு தந்தசன்னி
நீட்டியே சீழ்விழல் ரத்தங்காணல்
நிலையாது வுடலை விட்டு நீங்கும்பாரு
தாட்டிகமா யிந்தநூல் முறைபொய்யாது
தப்பாது தப்பாது திண்ணந்தானே.

அரப்பொடி, அக்ராகாரம், படிகாரம், மிருதார் சிங்கி, லவங்கப்பட்டை, காசுக்கட்டி, துருசு

இவைகளை சம எடையில் எடுத்து கல்வத்தில் போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு நான்கு சாமம் அரைக்க வேண்டுமாம். ஒரு சாமம் என்பது மூன்று மணி நேரம்.

இவ்வாறு நான்கு சாமமாக நன்கு அரைத்து பின்னர் அதை சேகரித்து பத்திரப் படுத்திக் கொள்ள வேண்டுமாம். பின்னர் இந்த கல வையை கொண்டு நான்கு நாட்கள் பல் துலக்கிவர தந்தவாய்வு, தந்தசன்னி, தந்தத்தில் சீழ்வடிதல், ரத்தம் வடிதல், முரசு சம்பந்தமான நோய்கள் எல்லாம் தீரும் என்கிறார். இப்படிச் செய்தால் இந்த நோய்கள் நிச்சயம் குணாமாகும் என்பதையும் வலியுறுத்துகிறார்.

இந்த சரக்குகள் எல்லாமே தற்போது எல்லா நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கிறது. விலையும் மிக மலிவுதான். இயற்கையான இந்த பற்பொடியினை நாம் வீட்டிலேயே தயாரித்து பலன் பெற்றிடலாம்.

இனி விலைகொடுத்து எந்தவித கெமிக்கல் பேஸ்ட்டுகளையும் வாங்காமல் சித்த மருத்துவ பொடியை பயன்படுத்தி பயன்பெறுவோம்.

# விரதம்

## கடைபிடிக்க வேண்டிய சாஸ்திர வழி முறை

எல்லா விரதங்களுக்கும் பொதுவானவிதி முறைகள் என நாம் பார்ப்போ மானால் அதிகாலையில் எழுதல், குளித்து சுத்தமானஆடைகளை அணிதல், சந்தியாவந்தனம் முதலிய நித்திய கர்மாநுஷ்டானங்களை (அநுட்டானம் பார்த்தல்) முறைப்படி செய்தல், ஆலய வழிபாடு செய்தல், காலை, மாலை வீட்டில் பூஜை அறையில் விளக்கேற்றி வழிபட்டு இயன்றவரை திருமுறைப்பாடல்கள் மற்றும் இறைபாடல்களைப் பாடுதல், விபூதி, உருத்திராட்சம் முதலிய சமய சின்னங்களை அணிந்திருத்தல், காலை உணவினை நீக்கி மதியம் ஒரு வேளை மட்டும் இன்னமும், இரவில் பால் பழமும், அல்லது பலகாரம் உண்ணல் என்பன எல்லா விரதங்களுக்குமே முக்கியமாக வேண்டப்படும் கட்டுப்பாடுகளாகும்.



விரதம் இருக்கும் பெண்கள், அதிகாலை சூரிய உதயத்திற்கு முன்னால் குளித்துச் சுத்தமாக இருக்க வேண்டும். வீடு வாசல்களைக் கழுவி சுத்தப்படுத்த வேண்டும். இவ்விதம் விரதோத்தியாபனம் செய்பவர்களுக்காகவும், சாதாரணமாக பாரணை (விரதம் முடித்தலை பாரணை என்று கூறலாம்.) சமயத்தில் ஆலய தரிசனம் செய்வதற்காக வருபவர்களுக்காகவும், உபவாசவிரதங்களுக்கு மறுநாள் காலையில் ஆலயங்களில் நிகழும் விஷேஷ பாரணைப் பூசையை அதிகாலையிலேயே நிறைவேற்றி விரதம் அநுஷ்டிப்போர் எட்டரை மணிக்கு முன் தமது பாரணையை முடித்துக் கொள்ளுவது சிறப்பு.

உரிய நேரத்தில் பாரணை பண்ணுவதற்குத் தடைகள் ஏற்பட்டால் பாரணைக்காக சமைத்த உணவைச் சாமிப்படத்திற்கு முன்படைத்து அதனை இந்த உரிய நேரத்தில் முகர்ந்து விடுதல் போதுமானது. பின்னர் இயன்ற பொழுதில் சாப்பிடலாம்.

சமையல் தயாரிப்பதிலும் தாமதம் ஏற்படின் சாமிபடத்திற்கு முன் ஒரு சிறு பாத்திரத்தில் நீரெடுத்து வைத்து அதில் துளசியை இரண்டு அடியிலைகளுடன் கூடிய கதிராக எடுத்து அந்த நீரை உரிய காலத்தில் அருந்தி பாரணையை நிறைவு செய்யலாம். பின்னர் வசதியான போது சாப்பிடலாம்.

ஒரு விரதத்தின் முடிவில் அதாவது பாரணை நாளில் இன்னொரு விரதம் வந்தால் இந்த முறையையே கடைப்பிடிக்க வேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இரண்டாவது விரதமும், உபவாசமாக இருந்தால் முதலாவது விரதத்தின் பாரணையைத் துளசி தீர்த்தம் அருந்தி நிறைவேற்றி விட்டு இரண்டாவது விரதத்தை முறைப்படி உபவாசமாக அனுஷ்டித்து அதற்கு மறுநாள் பாரணை செய்ய வேண்டும்.

பெரும்பாலும் கேதாரகௌரி நோன்பின் மறுநாள் கந்தசஷ்டி விரதம் ஆரம்பம்அல்லது கந்தசஷ்டி விரத முடிவில் அதாவது பாரணையன்று சோமவார விரதம் வருவதுண்டு. இச்சந்தர்ப்பத்தில் முதலில் நாம் பார்த்தவாறு தான் விதிமுறையை கடைபிடிக்க வேண்டும்.

சிலர் உதயத்திற்கு முன் விரதத்திற்குரிய பாரணையை (விரதம் முடித்தலை பாரணை என்று கூறலாம்.) முடித்துவிடுவதுண்டு. ஆனால் சூரிய உதயத்திற்கு முன் பாரணை செய்தல் விதியன்று.

விரத நியமனங்களை ஆரம்பத்திலேயே அளவுடன் கைக்கொள்வது நன்று கடுமையான முறையில் ஆரம்பித்து பின்னர் அரைகுறையாக நிறுத்துவது கூடாது. விரதத்தை கிரமப்படி அனுசரிக்க முடியாதவர்கள் தம்மால் இயன்றளவு அனுசரிப்பதே தகுதி தம்மளவுக்கு மீறி உடலை வருத்த நேரின் விரதத்தின் மீது வெறுப்பு தோன்றும் இதனால் விரத பலன் இல்லாமல் போய்விடும்.

இவ்விரதங்களை அனுஷ்டிக்கத் தகுதியானவர்கள் யார் தகுதியற்றோர் யார்? என்றொரு கேள்வி எழுகிறது. சுத்த போசனமுடையோராயும்





தீட்சை பெற்றவர்களாகவும், ஆசார சீலர்களாக வும் இருப்பவர்களே விரதங்களைக் கைக்கொள் ளத் தகுதி உடையோர் என்று விரத நூல்கள் எடுத்துரைக்கின்றன.

நோயாளர்களும், ஆசௌகரியமுடையோரும், பாலகர்களும், மாதவிலக்கான பெண்களும் விரதம் மேற்கொள்ளக்கூடாது. (உடலாலும் மனதாலும் இவர்கள் விரதமிருந்து தன்னை வருத்திக் கொள்ளக்கூடாது என்பதால் இவர் கள் விரதங்களை கடைபிடிக்க கூடாது என்று சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது.)

இவர்களுக்கு பதில், பெண்கள் சார்பில், தம் கணவர் அல்லது மகன் விரதமிருக்கலாம்.

நோயாளர்கள் சார்பில், பிள்ளைகள் அல்லது குருமார்கள் விரதத்தை நோற்றலாம்.

பாலகர்களுக்காகப் பெற்றோர் விரதமிருக் கலாம்.

ஆசார மில்லாதோர் அல்லது அசௌகரிய முடையோர் சார்பில் குருமாரை விரதம் மேற் கொள்ளலாம்.

சமையல் பாத்திரங்கள் விரதத்திற்கு எனத் தனியாகப் புதிதாகக் கழுவி சுத்தமாக ஏற்கனவே சமைத்ததாகவோ, அசைவ உணவு களைச் சமைத்த பாத்திரங்களாகவோ இருக்கக் கூடாது. முதல் நாள் சமைத்த உணவுகள் ஒதுக்கி வைக்கப்பட வேண்டும்.

விரதம் இருப்பவர்கள் பிறர் மீது கோபப் படுதல், பிறரைப் பற்றி தவறாகப் பேசுதல், பிறர் மனம் புண்படும்படி கேலி செய்தல், பிறரிடம் பேசாதிருத்தல், அதிகமாகப் பேசுதல் ஆகிய எதுவுமே செய்யக் கூடாது.

விரதம் என்ற பெயரை வைத்துக் கொண்டு அடிக்கடி நீராகாரம் சாப்பிடக்கூடாது. ஓய்வு தேவை என்று பகலில் படுத்துத் தூங்கக்கூடாது. நாம் விழித்திருந்து இறைவழிபாட்டில் நமது எண்ணங்களை சிந்தனையைச் செலுத்த வேண்டும்.

விரதம் இருப்போர் தாம்பத்திய உறவில் ஈடுபடுதல், தவறான உணர்ச்சிகளை உரு வாக்கும் நிகழ்ச்சிகளை பார்த்தல், கேட்டல் கூடாது. விரதத்தின் போது அசைவ உணவு களை சாப்பிடுதல், பிறருக்கு சமைத்துக் கொடுப்பது கூட தவறாகும். வெற்றிலை பாக்கு போடுதல், புகைப்பிடித்தல், மது அருந்துதல், சூதாடுதல் ஆகியவையும் கூடாது.

விரத நிபந்தனைகளை முழுமனதோடு ஏற்றுக் கொள்பவர்களாக இருக்க வேண்டும். விரதங்களுக்கு தகுந்தபடி ஒருவேளை, இரண்டு வேளை மூன்று வேளையும் உபவாசம் இருத்தல் ஆகிய எதற்கும் தயாராக இருக்க வேண்டும். விரத பூசையின் போது ஒவ்வொரு முறை யும் விநாயகருக்கு பூசை செய்த பிறகே விரதத் திற்கான தெய்வங்களுக்கு பூசை செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட விரதங்களில் குறிப்பிட்டமுறைப் படியே பூசை விதிகளையும், அனுட்டான முறை களையும் கடைப்பிடிக்க வேண்டும். விதியில் குறிப்பிட்ட மலர்களே அத்தெய்வங்களுக்கு பயன்படுத்த வேண்டும். மாற்று மலர்கள் பயன் படுத்தக் கூடாது. இது விரதங்களுக்கு பங்கம் ஏற்படுத்தும் என்பது முன்னோர் நம்பிக்கை.

விரதங்கள் இருப்பவர்கள் ஆணாக இருந்தால் முதலில் குடும்பத்தாரின் அனுமதி பெற்றே விரதம் இருக்க வேண்டும். கன்னிப் பெண்களாயின் பெற்றோரின் அனுமதியுடனும், மணமான பெண்கள் கணவனின் தாயாரான மாமியாரின் அனுமதி பெற்ற பின்னும் விரதம் இருக்க வேண்டும். பிறருக்கு உடன்பாடு இல்லாத சூழ்நிலையில் இருக்கும் விரதங்கள் முழுப்பலனைத் தராது.

விரத சம்ஹிதை என்னும் நூல் நோயாளிகள் மிகவும் வயதானவர்கள், குழந்தைகள் இப்படி உள்ளவர்கள் விரதம் பூசைகளில் கலந்து கொண்டால் போதும் என்கிறது. பெண்கள் வீட்டுக்கு விலக்காகி எழு தினங்கள் ஆன பிறகே விரதம் மேற்கொள்ளலாம்.

மேலும் குழந்தை பிறந்து நாற்பத்து எட்டு தினங்களுக்கும் பிறகே குழந்தை பெற்ற பெண் கள் விரதம் அனுஷ்டிக்கலாம். குடும்ப உறுப்பினர் எவரேனும் இறந்தால் அவர்கள் இறந்து மூன்று மாதங்களுக்குப் பிறகே குடும்பத்திலுள்ள மற்ற உறுப்பினர்கள் விரதங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இவை விரத அனுஷ்டானங்களுக்கான பொது விதிகளாகும். இவற்றோடு சம்பிர தாய பூர்வமாக தமது பிரதேசங்களில் நிகழும் நடைமுறைகளையும் குருமூலமாக உபதேசிக் கப்பட்டவற்றையும் சேர்த்து முழுமனதான விரதங்கள் நம்பிக்கையோடு அனுசரிப்பதே முறையாகும்.

விரதம் இருப்பவர்கள் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியவற்றை மனத்தில் உறுதியாகக் கொள்ளுவதையே விரதம் என்பார்கள். இவ்விதம் விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றபோது எதைச் செய்ய வேண்டும். எதைச் செய்யக்கூடாது என்பதனை சாஸ்திரங்கள் தெளிவு படக்கூறு கின்றன. இவற்றை நாம் முறைப்படி கைக் கொண்டால் விரதஅனுட்டானத்தின் முழு பயனைப் பெற்றுக்கொள்ளலாம்.

## வலது காலில் நடனம் ஆடிய நடராஜர்



ஈசன் தன் 64 திருவிளையாடல்களையும் நிகழ்த்திக் காட்டிய அற்புதத் தலம், மதுரை. சோம சுந்தரருடன் அன்னை மீனாட்சி திருவருள் புரியும் தலம்.

இங்கு ஈசனுக்கு ஐந்து சபைகள் உள்ளன. பாண்டிய மன்னன் ஒருவன் ஈசன் எப்போதும் இடக்காலைத் தூக்கியே நடனம் ஆடிக்கொண்டிருந்தால் அவருக்குக் கால் வலிக்காதோ என மனம் வருந்தினான்.

தன்னைப் பற்றி கவலை அடைந்த மன்னனின் கவலையை போக்க, இடதுகாலை தரையில்வைத்து, வலக்காலைத் தூக்கி நடராஜப் பெருமான் ஆடி காட்டிய அற்புதம் நிகழ்ந்த தலம்.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# தவ வாழ்க்கைக்கு பாம்பை தேர்ந்தெடுக்கும் சித்தர்கள்



நாம் நாகத்தை பாம்பாக மட்டுமே பார்க்கிறோம். ஆனால் நமது பண்டைய கால ஞானிகள் பாம்பு வடிவத்தை மூலாதார சக்கரத்தில் உறங்கி கொண்டிருக்கும் குண்டலினி சக்தியாக பார்த்தார்கள்.

புற்றுக்குள் இருக்கும் பாம்பு சீண்டி விட்டால் சீறிக் கொண்டு எப்படி கிளம்புமோ அதே போலவே யோக பயிற்சியால் சீண்டப்படும் குண்டிலினி தண்டுவடத்தை பற்றிக் கொண்டு சரசரவென பிரம்ம கபாலத்தை நோக்கி எழும்பும் என்று சொன்னார்கள்.



இதனால் தான் கடவுள்களின் உருவத்தோடு நாகத்தை சம்பந்தப்படுத் தினார் கள்.

பரந்தாமனின் பாம்பு படுக்கை பரமசிவனின் பாம்மனி எல்லாமே குண்டலினி தத்துவத் தை த விளக்க எழுந்ததேயாகும்

இனி நாக வழிபாடு நம் நாட்டில் எப்போது இருந்து கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை சற்று ஆராய்வோம்.

இந்திய துணைக்கண்டம் முழுவதுமே ஆதிகாலம் தொட்டே நாக வழிபாடு, இருந்து வருகிறது.

சைவம், வைணவம், பௌத்தம், ஜைனம் போன்ற மதங்கள் வளர்ச்சி அடைந்த காலத்தில் அந்தந்த சமயத்தின் சாயல்களை கொண்டு இந்திய துணைக் கண்டம் முழுவதுமே நாக வழிபாடு விரிவடைந்தன என சொல்லலாம்.

திருமாலும் சிவபெருமானும் மட்டுமே நாகங்களை துணையாக கொள்ளவில்லை. பல புத்தர் சிலைகளை பார்க்கும் போதும் மகாவீரரின் சில தோற்ற கோலங்களை காணும் போதும் ஐந்து தலை நாகம் அவர்களுக்கு குடைபிடித்து இருப்பது தெரிகிறது.

சிந்து சமவெளி நாகரிக காலத்திலும் அதற்கு முன்னரும் கூட நாகங்களை மக்கள் வழிபட்டு இருக்க வேண்டும்.

ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு முத்திரைகளில் வழிபாட்டுக்குரிய நாகங்கள் செதுக்கப்பட்டிருப்பதை வைத்து நாம் இந்த முடிவுக்கு வரலாம்.

வேதங்களில் பல இடங்களில் பாம்புகளை பற்றி விரிவான குறிப்புகள் வருகின்றன.

வேதகால மக்கள் பாம்புகளை அஹீ என்ற பெயரில் அழைத்திருக்கிறார்கள். ரிக், சாம வேதங்களில் வணக்கத்துக்ரியதாக பாம்புகள் சொல்லப்படவில்லை.

ஆனால் யஜூர் வேதம் பாம்புகளை தெய்வ நிலையோடு ஒப்பிட்டு பேசுகிறது யஜூர் வேதம் பாஞ்சால நாடுகளில் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

பழங்கால பாஞ்சல தேசத்திடில் தலைநகரம் அஹீ சத்திரமாகும். அதாவது இதன் பொருள் பாம்புகளின் வீடு என்று சொல்லலாம்.

இந்த தேசத்தின் மன்னர்களாக விளங்கிய அக்னிமித்திரன், பானு மித்திரன் ஆகியோர்களின் காலத்து நாணயங்களில் பாம்பு முத்திரை பொறிக்கபட்டுள்ளது.

அதர்வண வேதத்தின் சில பகுதிகளில் பாம்புகளை தாந்திரிக நெறிக்கு பயன்படுத்தும் விபரங்கள் உள்ளன

நாக வழிபாடு பற்றி நித்தேஷ என்னும் பௌத்த நூலும் பேசுகிறது. அதில் சர்ஜீகோ ணோவில் உள்ள பகவா நாகோ என்ற வழிபாட்டுக்குரிய நாகத்தை பற்றி விளக்கங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன.

குஷான மன்னர்களின் காலத்தில் இந்த நாக வடிவம் சிலை வடிவாக உருவாகியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

மதுராவில் உள்ள அருங்காட்சியகம் ஒன்றில் கனிஷ்க மன்னனால் செதுக்கி வைக்கப்பட்ட நாக வடிவம் இன்றும் இருக்கிறது.

கடவுளின் பிரதிநிதியாக கருதப்பட்ட நாகங்கள் காலப் போக்கில் இறந்தவர்களின் ஆவியோடு தொடர்பு படுத்தப்பட்டும் புதையல்களை மர்மமான முறையில் பாதுகாக்கப்படுகின்றன என்றும் நம்பிக்கை ஏற்பட்டது.

பாம்புகளை பொறுத்த வரை எல்லா மதத்தின ரும் அறிவு பூர்வமாகவும்,


ஆன்மிகமலர் மெயில் புக்

மூடத்தனமாகவும் நம்பினர் என்றே சொல்ல வேண்டும்.




பண்டைய கால சிற்பங்களும், ஓவியங்களும், நாகர்களும், நாக கன்னிகளும் காட்டப் படுகிறார்கள்.

இவர்கள் பாதி மனித உருவம், பாதி பாம்பு வடிவமும் பெற்றவர்கள்.

பாலித்தீவில் நாக கன்னிகை மழை கடவுளான வருண தேவனின் பனிப்பெண்ணாக கருதுகிறார்கள்.

மகாபாரதத்தில் அனுசாய பருவத்தில் நாகத்தை வழிபடுவதன் மூலம் விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஒன்றான வராக அவதாரத்தின் பலத்தை பெறலாம் என்று சொல்லப்படுகிறது.

இதனாலேயே பிற்காலத்தில் உருவான வராக சிற்பத்தில் காலுக்கடியில் பாம்பு செதுக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் தனிப்பெரும் வாழ்க்கை முறையை விவரிக்கும் சங்க இலக்கியங்களில் நாக வழிபாடு சிறப்பாக கூறப்பட்டுள்ளதை காணலாம்.

பொதுவாக பாம்புகளை வழிபடுவது இந்து மதத்தில் உள்ள யோக சார மார்க்கத்தின் வழி பாட்டு முறையேயாகும்.

ஆனால் அந்த உண்மை நிலை மறைந்து இன்று கிராம தேவதைகளின் பட்டியலில் நாக தேவதைகள் சேர்ந்து விட்டன.

இதற்கு முக்கிய காரணம் இறந்தவர்களின் ஆன்மா பாம்பு வடிவத்தில் உலாவுவதாக உள்ள நம்பிக்கையே ஆகும்

நல்லப்பாம்பு என்ற நாகத்தை வீணாக சாகடிக்க கூடாது என்று சொல்வதில் பல அமானுஷ்ய உண்மைகள் உண்டு

சித்தர்கள் பரகாய பிரவேசம் என்ற கூடுவிட்டு கூடுபாயும் வித்தை தெரிந்தவர்கள் என நமக்குத் தெரியும்.

மனித ஆத்மாவானது மனித சரீரத்தை தவிற காக்கை மற்றும் நாகப்பாம்பின் உடல்களில் சுலபமாக பிரவேசிக்கலாம் என்று சித்தர்களின் ரகஸிய சித்தாந்தங்கள் சொல்கின்றன

இதனால் தவ வாழ்வை எந்தத் தொந்தரவும் இல்லாமல் கழிக்க பாம்பின் உடல்களை தேர்ந்தெடுத்து பல சித்தர்கள் வாழலாம்

நாம் தெரியாத்தனமாக சர்ப்பங்களை சாகடித்தால் அவர்களின் தவத்தைக் கலைத்த பாவத்திற்கு ஆளாவோம் எனவேத்தான் பாம்புகளை சாகடிக்க வேண்டாமென முன்னோர்கள் சொன்னார்கள்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434







# புத்தரின் அறநெறி

வாய்மையை உங்களால் புரிந்து கொள்ள முடியாவிட்டால் அதில் **நம்பிக்கை கொள்ளுங்கள்.** அதன் இனிமை கசப்பானது என்று கருதிச்ல் துவக்கத்தில் அதைக் கண்டு தயங்கிச்லும் வாய்மையை உறுதியாக நம்புங்கள்.

வயல்களுக்குத் தீமை களைகள். **சமுதாயத்துக்கு தீமை ஆசைகள்.** எனவே ஆசையில்லாதவர்களுக்குச் செய்யும் உதவி பெரும் பயனை ஏற்படுத்தும்.

அறியாமையுடன், அடக்கம் இல்லாமல் ஒருவன் நூறு ஆண்டுகள் வாழ்வதைவிட, **ஞானத்தோடு** தியானம் புரிந்து வரும் ஒருவன் ஒரு நாள் மட்டும் **வாழ்வதே மேலானது.**

எந்தக்காலத்திலும் **பகை என்பது பகைமையால் நீங்கி விடுவது இல்லை.** பகையைத் தீர்த்து வைக்க அன்பு ஒன்றால் மட்டுமே முடியும்.

பொற்காசுகளை மழையாகப் பொழிந்தாலும் ஆசைகள் அடங்காமல் பெருகும். **ஆசை**களின்படி அனுபவித்தல் அற்ப இன்பம் என்றும் பின்விளைவு **துக்கமென்றும் அறிந்தவன் முனிவனாவான்.**

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து Aanmeega malar (mobile app) டவுன்லோடுசெய்து, செல்போனிலேயே நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.
GET IT ON Google Play

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும்

# உடலுடன் தொடர்புடைய புராண கதை

தற்போதைய காலகட்டத்தில் புராண நிகழ்வுகள் அனைத்தும் கிண்டலடித்து பேசும் பழக்கம் வெகுவாக பரவிவருகிறது.

அந்தவகையில் பாற்கடலைகடைந்த கதையும் கீழ்கண்டவாறு கிண்டலடித்துக் கூறப்பட்டு வருகிறது.

இதற்கு சரியான விளக்கத்தை ஆன்மிக அன்பர் ஒருவர் பதிவிட்டுள்ளார், அதைப்பார்ப் போம்.

பாற்கடலை கடைய அமுதம் வருமா? அப்படி கடைவதற்கு மேரு மலை மத்தாக பயன் பட்டதாம். வாசுகி பாம்பு கயிறாக பயன்பட்டதாம் இதைவிட ஒரு காமெடி என்னன்னா அவ்ளோ பெரிய மலையை ஒரு ஆமை தான் முதுகுல தாங்கிக்கிச்சாம் கேட்டா அது விஷ்னு வோட அவதாரமாம். அவ்ளோ பெரிய ஆமையை Discovery சேனல்ல கூட காமிக்கலையே.



www.aanmeegamalar.com

தேவர்களும், அசுரர்களும் பாம்பின் தலையையும் வாலையும் பிடித்து இழுத்தார்களாம்.

அப்படி இழுக்கும் போது முதலில் ஆலகால விஷம் வந்ததாம். அத அப்படியே சிவன் அள்ளிக் குடிச்சாராம். அப்புறம் அமுதம் வந்துச்சாம் அத குடிச்ச தேவர்கள் சாகவே இல்லையாம்.

இப்படி ஒரு Fantacy கதைய Hollywood படத்துல கூட சொன்னதில்ல. இந்த கதையையெல்லாம் நம்பிக்கிட்டு இன்னமும் நீ சாமி கும்பிட்டுகிட்டு இருக்க.

இப்படி தன் இரவல் அறிவையெல்லாம் ஒன்று திரட்டி ரொம்ப பெரிய கஷ்டமான கேள்வியக் கேட்டு விட்டதாகவும் என்னை மட்டம் தட்டி விட்டதாகவும் இருமாந்திருந்தார் நண்பர் ஒருவர் (பாவம் சமீபத்தில்தான் பகுத்தறிவு பால்வாடியில் சேர்ந்திருப்பார் போல).

நான் நிதானமாக சொன்னேன் இந்த கலாச் சாரத்தில் சொல்லப்படுகின்ற கதைகள் எல்லாம் உருவகங்கள்.

மிகப்பெரிய தத்துவங்களை எல்லாம் குழந் தைக்கு கூட புரியும் வண்ணம் புனையப்பட்ட உருவகக்கதைகள் இவை.

இதுபோன்ற புராணக் கதையை அப்படீயே எடுத் துக் கொண்டு வாதிடுவது அறிவுடைமை ஆகாது.

அதனால் Encoding செய்யப்பட்ட உருவகங் களை Decoding செய்தால் போதும். பொருள் அதுவாகவே விளங்கும்.

சரி. இப்போது இந்த பாற்கடல் கதையை Decode செய்கிறேன்.





- பாற்கடல் ..........குண்டலினி சக்தி
- மேருமலை ........முதுகுத்தண்டு
- வாசுகி பாம்பு....மூச்சுக்காற்று (உஷ்...உஷ்னு எனும் சத்தம் வருகிறது)
- தேவ, அசுரர் ....இடகலை, பிங்கலை (நாடி)
- ஆமை .............ஐம்புலன்களையும் அடக்கி ஆளும் தன்மை
- தொண்டைக்குழி ..விசுக்தி
- விஷ்னு ............வாழ்வு
- ஆலகாலவிஷம் .....கபம்
- அமுதம் ............நித்ய வாழ்வு (மரணமில்லா பெருவாழ்வு)

அதாவது முதுத்தண்டின் இரு பக்கமும் செல்லும் இடகலை, பிங்கலை நாடி வழியே மூச்சுக்காற்று சதா ஓடிக்கொண்டிருக்கிறது.

(இதைத்தான் சிவவாக்கியர் சங்கிரண்டையும் தவிர்ந்து தாரை ஊதச் சொன்னார்)



ஆமைபோல் ஐம்புலன்களையும் அடக்கி அதை ஆதாரமாகக் கொண்டு வாசி யோகம் மூலம் இடகலை, பிங்கலை வழியே மாற்றி மாற்றி மூச்சுக்காற்றை இழுக்கும்போது (நாடி சுத்தி) நித்யப் பெருவாழ்விற்கான அமுதம் சுரக்கும் அதை உண்டவர்கள் தேவர்கள் போல மரண மில்லா பெருவாழ்வு அடைவர்.

ஆனால் இந்தப்பயிற்சியின் போது அளவுக் கதிகமான கபமே முதலில் வெளிப்படும் ஆனால் பரம்பொருள் சிவனின் கருணையால் அந்த கபத்தை கலைத்துவிடும். (சந்தேகம் இருப்பின் வாசி யோகம் பயின்றவரிடம் கேட்டு தெளிவு பெறலாம்) என்று விளக்கினேன்.

அவரும் பாவம் வேறொருவருக்கு பாடம் எடுக்க சென்றுவிட்டார். விநாயகர் சக்தியின் அழுக்குருண்டையில் பிறந்தவராமே என்று.

அவர் கிடக்கட்டும். உங்களுக்காக (புரிந்து கொள்ள நினைப்போருக்கு) மேலும் சில உருவ கங்களின் Decodings

- ஒரே இறைவன் (இஸ்லாம்) அத்வைதம் (Oneness)
- சக்தி, சிவன் துவைதம் (Duality)
- பிதா, சுதன், பரிசுத்த ஆவி விசிஷ்டா துவைதம் உருவகம்
- சும்மா இருந்தால் சிவம் (Static)
- ஓயாமல் அசைந்தால் சக்தி (Dymnamic)
- சக்தி இல்லையேல் சிவம் இல்லை உருவகம்
- திரிசூலம் இச்சா சக்தி,கிரியா சக்தி, ஞான சக்தியின் உருவகம்
- கணபதியை (பூமி) சக்தி (Dynamic force)
- அழுக்கை (Dust of universe) உருட்டி படைத்தாள் இது பூமி தோன்றலின் உருவகம்
- தில்லை நடராசர் நடனம் Cosmic dance ன் உருவகம் (அறிவியல் ஏற்றுக்கொண்டது)
- சிவன் (யோக சக்தி), திருமால் (போகசக்தி)

இவற்றின் கலவையான சக்தியே ஐயப்பன் உருவகம் முப்பரிமாணம் மட்டுமே உணரக்கூடிய மனித மூளைக்கு நாலாவது பரிமானமான காலத்தை உணர்த்த மகாகாலன், அதன் எதிர்பரிமாணம் மகாகாளி உருவகம்

- Vijayalakshmi Chidambaram



www.aanmeegamalar.com



# மகிமை மிகுந்த தீர்த்தங்களை கொண்ட திருச்செந்தூர்

முருகப்பெருமானின் அறுபடைவீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் கடல் சார்ந்தது என்பதால், ஆடி, தை மற்றும் மஹாளய அமாவாசை புண்ணிய தினங்களில், இங்கு வந்து பித்ரு ஆராதனை செய்வது சிறப்பு என்பார்கள் பெரியோர்கள்.

இதுமட்டுமல்ல, இன்னுமொரு சிறப்பம்சமும் உண்டு. காயத்ரி மந்திரத்தின் 24 எழுத்துக்களும் இந்தத் தலத்தில் தீர்த்தமாக உள்ளதாகக் கூறப்படுகிறது. இவற்றில், கந்த புஷ்கரணி எனப்படும் நாழிக் கிணற்றில் மட்டுமே பக்தர்கள் நீராடி வருகிறார்கள்.

கடற்கரையில் அமைந்திருந்த சில தீர்த்த கிணறுகள் மணல் மூடி தூர்ந்துவிட்டன. அந்தத் தீர்த்தக் கட்டங்களைக் குறிப்பிடும் கல்வெட்டு களும் காணாமல் போய்விட்டனவாம். சிறப்புமிகு 24 தீர்த்தங்களை நாம் அறிந்துகொள்வோமா?

**முகாரம்ப தீர்த்தம்:** இதில் மூழ்குவோர் கந்தக் கடவுளின் கருணை அமுதத்தைப் பருகுவர்.

**தெய்வானை தீர்த்தம்:** இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர் ஆடை அணிகலன், போஜனம், தாம்பூலம், பரிமளம், பட்டு, பூ அமளி என்கின்ற இன்பத்தைப் பெறுவர்.

**வள்ளிதீர்த்தம்:** இந்தத் தீர்த்தம் ஒருமையுள்ளத் துடன் பிரணவ சொரூபமாய் பிரகாசிக்கின்ற கந்தப்பெருமானின் திருவடித் தாமரையைத் தியானிக்கும் ஞானத்தைக் கொடுக்கும்.

**லட்சுமி தீர்த்தம்:** இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர், குபேரனும் அடைவதற்குரிய செல்வங்களைப் பெறுவர்.

**சித்தர் தீர்த்தம்:** காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களும் நீங்கி முக்திக்குத் தடையாகிய உடல், உலக, பைசாசு என்கிற பகை களை விலக்கி முக்தி வழியை நாடச் செய்யும்.

**திக்கு பாலகர் தீர்த்தம்:** கங்கை, யமுனை, காவிரி முதலிய தீர்த்தங்கள் கொடுக்கும் பலனைத் தரும்.

**காயத்ரீ தீர்த்தம்:** அநேக வேள்விகளைச் செய்தவர் அடைகின்ற பலன்களைப் அருளும்.

**சாவித்ரிதீர்த்தம்:** பிர மாதி தேவர்களாலும் காண்பதற்கு அரிய உமாதேவியின் பொன்னடிகளைப் பூஜித்த பலனைப் கொடுக்கும்.

**சரஸ்வதி தீர்த்தம்:** சகல ஆகம புராணங்க ளையும் அறியத் தகுந்த அறிவைக் கொடுக்கும்.

**அயிராவத தீர்த்தம்:** சந்திர பதாகை முதலிய நதிகளில் நீராடிய பலனைப் பெறலாம்.

**வயிரவ தீர்த்தம்:** இந்தத் தீர்த்தத்தில் நீராடி யோர் பல புண்ணிய நதிகளில் மூழ்கியவர் அடையும் பலனை அடைவர்.

**துர்கை தீர்த்தம்:** சகல துன்பங்களும் நீங்கி நன்மைகிட்டும்.

**ஞானதீர்த்தம்:** இறைவனைப் பரவுவோருக்கும் பரவு வதற்கு நினைத்தோர்க்கும் நன்மையைக் கொடுத்தருளும்.

**சத்திய தீர்த்தம்:** களவு, கள்ளுண்டல், குரு நிந்தை, அகங்காரம், காமம், பகை, சோம்பல், பாதகம், அதிபாதகம், மகா பாதகம் ஆகியவற்றினின்றும் நீக்கி, சித்தத்தை நன்னெறியில் நிற்கச் செய்யும்.

**தரும தீர்த்தம்:** தேவாமிர்தமாகிய மங்கள கரத்தைக் கொடுத்தருளும்.

**முனிவர் தீர்த்தம்:** மூழ்குவோர் ஜகத்ரட்ச கனைக் கண்ட பலனைப் பெறுவர்.

**தேவர் தீர்த்தம்:** காமம், குரோதம், லோபம் மோகம் போன்ற ஆறு குற்றங்களை நீக்கி, ஞான அமுதத்தை நல்கும்.

**பாவநாச தீர்த்தம்:** சாபங்களை விலக்கி அனைத்துப் புண்ணியார்த்தங்களையும் அளிக்கவல்லது.

**கந்தபுட்கரணி தீர்த்தம் :** சந்திரசேகர சடாதரனுடைய திருவடியை முடிமிசை சூடும் மேன்மையைப் பெறுவர்.

**கங்கா தீர்த்தம்:** இத்தீர்த்தம் முக்திக்கு ஏதுவாய் பிறவிக் கடலைக் கடக்கச் செய்யும் தெப்பம் போன்றிருக்கும்.

**சேது தீர்த்தம் :** சகல பாதகத்தினின்றும் நீக்கி




நன்மையைக் கொடுத்தருள வல்லது.

**கந்தமாதன தீர்த்தம்:** இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர்க்குப் பாவங்களைப் போக்கி பரிசுத்தத்தைத் தர வல்லது.

**மாதுரு தீர்த்தம்:** இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர்க்கு அன்னையைப் போன்று ஆசீர்வதித்து அதிலும் பன்மடங்கு அதிகமாக பலனைக் கொடுக்கும்.

**தென்புலத்தார் தீர்த்தம்:** இதில் ஒரு தரம் மூழ்கி எள்ளும் தண்ணீரும் இறைத்தவர்களுக்கு இம்மை மறுமையும் சிறந்து விளங்க செந்தி லாண்டவன் திருவருட் கரந்து வாழும் பதத்தைக் கொடுத்தருளுவார்.

மேலும், கோயிலுக்குத் தெற்கே 200 அடி தூரத்தில் நாழிக் கிணறு உள்ளது. பெரிய கிணற்றுக்குள்ளே ஒரு சிறு கிணறாக ஒரு சதுர அடி பரப்பும் ஏழு அடி ஆழமும் உள்ள இந்தத் தீர்த்தம், உவர்ப்பு அற்ற நன்னீராகக் காட்சி தருகின்றது. சமுத்திரக்கரையோரம் இப்படி இனிய நீராக அமைந்துள்ளது கந்தப்பெருமானின் அருளாடலேயாகும். இதில் மூழ்குவோர் சகல நலன்களையும் பெறுவார்கள்.

இத்தகு தீர்த்தச் சிறப்புகள் மிகுந்த திருச்செந்தூருக்கு, ஆடி அமாவாசை மஹாளய அமாவாசைஅன்று புனித நீராடி, முன்னோரை ஆராதித்து அருள்பெற்று வருவோம்.



# உங்கள் வாழ்க்கையில் இறைவனுக்காக நேரம் ஒதுக்குதல்

**69 பாகம்**

**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**

**மனித வாழ்வு மேம்படுவதற்காக**

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகனாந்தர் அருளுகிறார்: "ஒவ்வொன்றும் அதன் இடத்தை பெற்றிருக்கின்றது. ஆனால் உங்கள் உண்மையான ஆனந்தத்தை விலையாகத் தந்து நேரத்தை நீங்கள் விரையம் செய்வது உகந்ததல்ல. தியானம் செய்து இறைவனை அறிய முயலுவதற்காகவும், அவனது தெய்வீக உணர்வில் இரவும் பகலும் என்னால் இருக்க முடிவதற்காகவும் நான் ஒவ்வொரு தேவையற்ற செயலையும் கைவிட்டேன்."

"நாம் வாழ்க்கையை சரியாகவும் விவேகத்துடனும் மற்றும் வீணாக்காமலும் பயன்படுத்தினால் நம்மால் அதை எவ்வளவு மேன்மையாக்க முடியும் என்பதை நம்மில் வெகு சிலரே அறிவார்கள், நமது நேரத்தை நாம் சிக்கனமாகச் செலவு செய்வோம்.

நாம் விழித்தெழுவதற்குமுன் வாழ்நாட்கள் கழிந்துவிடும். அதனால்தான் இறைவன் நமக்கு அளித்துள்ள அழிவற்ற காலத்தின் மதிப்பை நாம் உணர்வதில்லை, சோம்பலில் உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள். மிக அநேகர் பயனற்ற செயல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.

அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் என்று கேளுங்கள், அவர்கள், "ஓ நான் ஒவ்வொரு நிமிடமும் மும்முரமாயிருக்கின்றேன்" என்று வழக்கமாகக் கூறுவார்கள். ஆனால் அவர்கள் எதைப்பற்றி மும்முரமாயிருந்தார்கள் என்பதை அவர்கள் நினைவு கூர்வது அபூர்வம்! ஒரு நொடிப்பொழுதில் நீங்கள் இந்த உலகை விட்டு நீங்க வேண்டியிருக்கும்; உங்களுடைய எல்லா நிகழ்ச்சிகளையும் ரத்து செய்ய வேண்டியிருக்கும். பிறகு ஏன் வேறு எந்த வேலைக்கும் முதன்மையான முக்கியத்துவத்தை அளித்து, அதன் பயனாக உங்களுக்கு இறைவனுக்கென நேரம் இல்லாதவாறு செய்யவேண்டும்? இது விவேகமல்ல. நம் மீது வீசப்பட்டுள்ள மாயவலை என்னும் 'மாயை'யின் காரணமாக நாம் நம்மையே உலக ஆசைகளில் சிக்கவைத்துக்கொண்டு இறைவனை மறந்து விடுகிறோம்."

அவருடைய சீடரில் ஒருவர், "எது மிகச் சிறந்த பிராத்தனை?" என்று கேட்டார். அதற்கு பரமஹம்ஸ யோகானந்தர் பதிலளிக்கிறார்: "இறைவனிடம் கூறுங்கள்; 'தயவு கூர்ந்து உன் சித்தத்தை எனக்குத் தெரிவி; எனக்கு இது வேண்டும் அது வேண்டும் என்று கூறாதீர்கள்" ஆனால் தேவை என்ன என்பதை அவன் அறிவான் என்பதில் நம்பிக்கைவையுங்கள். உங்களுக்காக இறைவன் தேர்ந்தெடுக்கும்பொழுது மிகவும் சிறந்தவற்றை நீங்கள் பெறுவதைக் காண்பீர்கள்."

"யோகம் என்பது அனைத்தையும் இறை உணர்வுடன் பயிற்சி செய்கின்ற கலையாகும். நீங்கள் தியானித்துக்கொண்டிருக்கும்பொழுது மட்டுமல்ல, நீங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கும்பொழுதுகூட உங்களது சிந்தனை கள் அவனில் இடைவிடாது நங்கூரமிடப்பட்டிருக்கவேண்டும்.

இறைவனை மகிழ்விப்பதற்காக நீங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் என்ற உணர்வுநிலையுடன் நீங்கள் செயல்பட்டால், அந்தச் செயல் உங்களை அவனுடன் இணைக்கிறது. தியானத்தில் மட்டுமே உங்களால் இறைவனை காணமுடியும் எனக் கற்பனை செய்யாதீர்கள். பகவத் கீதை போதிப்பதைப்போல், தியானம் மற்றும் சரியான செயல்பாடு ஆகிய இரண்டுமே முக்கியமானவை. இந்த உலகத்தில் உங்களது கடமைகளை நீங்கள் ஆற்றும்பொழுது இறைவனை நீங்கள் நினைத்தால், மனதளவில் அவனுடன் நீங்கள் இணைந்திருப்பீர்கள்.

தனக்காக அல்லாமல், நீங்கள் இறைவனுக்காகப் பணியாற்றும்பொழுது, அது தியானத்தைப்போன்றே உத்தமமானதாகும். அப்பொழுது உங்களுடைய பணி தியானத்திற்கும் தியானம் உங்களுடைய பணிக்கும் உதவுகிறது. தியானம் மட்டும் எனில், நீங்கள் சோம்போறியாகி விடுவீர்கள், பணிமட்டும் எனில் மனம் உலகப்பற்றுள்ளதாகி விடுகிறது. அவ்வாறானால் நீங்கள் இறைவனை மறந்து விடுவீர்கள்."

மேலும் அவர் கூறுகிறார்: " முக்கியம் குறைந்த ஆசைகளையும் கடமைகளையும் முதலில் நிறைவேற்றவேண்டிய அவசியத்தின்மீதுள்ள நம்பிக்கை மனிதனின் மிகப்பெரிய மயக்கமாகும். "குருதேவர் தன்னுடைய ஒரு நிகழ்வினைக் கூறுகிறார்: "எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. எனது குருதேவர் ஸ்ரீ யுக்தேஸ்வரிடம் இளம் சீடனாக நான் பயிற்சி பெற்ற காலத்தில், "நாளைக்கு நான் நீண்ட நேரம் தியானம் செய்வேன்," என தினமும் எனக்கு நானே வாக்குறுதி அளித்தவண்ணம் இருந்தேன் என்பதை நான் உணர்வதற்குள் ஒரு முழு வருடம் கழிந்துவிட்டது. உட னேயே காலையில் முதல் வேலையாக குளித்து விட்டு பிறகு நீண்டநேரம் தியானம் செய்யவேண்டும் என்று ஒரு தீர்மானம் செய்தேன். ஆனால்



அப்பொழுதுகூட நான் படுக்கையை விட்டு எழுந்த உடனேயே, எனது தினசரி கடமைகளிலும், செயல்பாடுகளிலும் சிக்கிக் கொண்டேன், இதைத் தொடர்ந்து முதலில் தியானம் செய்வதென உறுதி பூண்டேன். இவ்வாறாக ஒரு மகத்தான பாடத்தைக் கற்றுக்கொண்டேன். இறைவனுக்கான எனது கடமை முதலிடம் பிடிக்கிறது, அதன் பிறகு நான் அதனினும் முக்கியத்துவம் குறைந்த மற்ற எல்லா கடமைகளையும், கவனித்துக்கொள்கின்றேன்."

குருதேவர் தொடர்ந்து கூறுகிறார்;"உங்களது தேவைகள் மற்றும் உங்கள் விருப்பங்களுக்கிடையே வித்தியாசத்தைக் காண்பது மிகவும் குறைவானவை. அதே சமயம் உங்களுடைய விருப்பங்கள் எல்லையற்றனவாக இருக்க முடியும்.

விடுதலையையும் பரமானந்தத்தையும்காண்பதற்கு உங்களது தேவைகளை மட்டுமே கவனியுங்கள். அளவற்ற ஆசைகளை உருவாக்கி, பொய்யான சந்தோஷமாகிய கொள்ளிவாய்ப் பிசாசைப் பின் தொடர்ந்து செல் வதை நிறுத்துங்கள்".

"இறைவனுக்கான செயல்களைப்புரிவது நன்கு திருப்தி அளிக்கின்ற மிகவும் தனிப்பட்டஅனுபவமாகிறது. நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தாலும் சரி, இறைவனது மறுமொழியை உணர்வுபூர்வமாக நீங்கள் பெறும்வரையில், உங்களுடைய அன்பை அவனிடம் மென்குரலில் சொல்ல உங்களுக்கு எப்பொழுதும் சுதந்திரம் உள்ளது.

தற்கால வாழ்க்கைமுறையில் வெறித்தனமான அவசரகதியில் அவனை தொடர்பு கொள்வதற்கு இதுவே மிக நிச்சயமான வழியாகும். இறைவனிடத்தில் மானசீகமாக இரகசியமாகப் பேசும் பழக்கம்தான் உங்களது வளர்ச்சியில் மிகப்பெரிய உதவியாகும். நீங்கள் மிகவும் விரும்பக்கூடிய வகையில் உங்களிடத்தில் ஒரு மாற்றத்தைக் காண்பீர்கள். இரவும் பகலும் உங்கள் மனம் இறைவன் மீது இருக்கவேண்டும். அற்பமான ஆசைகளை அவனுக்கான ஒரு பேரவாவாக மாற்றுங்கள். உங்கள் மனம் இடைவிடாது மென் குரலில் கூறவேண்டும்," இரவும் பகலும் இரவும் பகலும், உனை எதிர்பார்க்கிறேன் இரவும் பகலும்." அதுதான் நாம் வாழவேண்டிய வாழ்க்கைத் தத்துவமாகும், பணம் அல்லது பாலுணர்வு



அல்லது புகழுக்குப் பதிலாக இரவும் பகலும் உங்களுடைய மனதின் பின்னணியில் உருண்டு கொண்டிருக்கவேண்டியது; இறைவா ! இறைவா ! இறைவா !" இவ்வாறாக வாழும்படி குருதேவர் அருளியுள்ளார்"

அன்பிற்குரிய குருதேவர் அருளியுள்ளவாறு ஒவ்வொருவரும் வாழ்வாரேயானால், அவர்கள் இறைவனிடம் செல்வது நிச்சயமாகிவிடும். இறைவனாகின்ற மகாசமுத்திரத்திற்கு அதாவது இறைவனின் சாம்ராஜியத்திற்குச் செல்வதற்கான பாதையை இறைவனே காட்டிவிடுவான். எவ்வாறெனில் நம் மனம் இறைவனில் தெளிந்த நீரோடையாகும்பொழுது இறைவனின் சாம்ராஜியத்திற்குச் செல்லவேண்டிய பாதையை தெளிந்த நீருக்குள்ளேதெளிந்த மனதிற்குள்ளேகாணலாம். நாம் இந்த லௌகீக வாழ்வில் மூழ்கியிருப்பது நமக்கு ஆபத்தை விளைவிக்கின்ற செயலாகும். ஆன்மீகமும் லௌகீகமும் இறைவனின் இரண்டு பகுதிகளே. முதலில் செய்ய வேண்டியது என்னவெனில், இறைவனுக்காக நேரம் ஒதுக்கி அவனை மனதில் நிறுத்தி தியானிக்கவேண்டும். மற்ற பணிகளும் கடமைகளும் அதற்குப் பின்னர்தான். இறைவனுக்கு முதன்மை முக்கியத்துவம் அளிக்கவேண்டும். ஆத்மா புனிதமானது; களங்கமற்றது.

நமக்குள்ளிருக்கும் ஆத்மாவை இறைவனுடன் இணைப்பதே நம் லட்சியமும் கடமையுமாகும். அதை விடுத்து லௌகீக வாழ்விலே மூழ்கியிருப்பது ஆத்மாவை நரகத்தில் மூழ்கடிப்பதாகும். இறைவனுக்கு முதலிடம் கொடுத்து இறைவனைத் தவிர வேறு எந்தவித ஆசையுமின்றி இவ்வுலகில் வாழ்வது என்றால் அதுதான் சுவர்க்கம். ஏனெனில், குருதேவர் கூறுவது போன்று, காலையில் தூங்கி எழுந்தவுடன் முதன்மைப்பணியான தியானத்தைச் செய்வதும், பின்னர் எந்தப் பணி செய்தாலும் இறை நினைவுடன் இறைவனுக்கு செய்வதும் இறைவனுக்காக வாழ்வதும், இவற்றிற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதுமாக இருந்தால் எப்பொழுதும் இறைவனுடன் வாழ்வதுஅதுவே சொர்க்கம். மாறாக எப்பொழுதும் உலகத்தையும் உலகப்பொருட்களையும் எண்ணிவாழ்வதாக இருந்தால்இறைவனை மறந்துள்ள வாழ்க்கை அது நரகவாழ்க்கைக்குச் சமமாகும். அதை உணருபவர்கள் மனதைத் தெளிய வைக்கும்போது

இறைவனை உணர்ந்தறியும் போது அது மூலமாக நமக்குள்ளிருக்கும் இறைவனை அறியலாம். அதனால் நாம் என்றென்றும் இறைவனுடைய குழந்தைகளாகவே இருந்தால் நமக்கு எந்த பயமும் இல்லை: எந்த ஆபத்தும் இல்லை என்பது உறுதி.

அதற்கான ஓர் உதாரணத்தைக் கூறவிழைகின்றேன்அரண்மனையென்றால், அரசன் முதன்மை வாய்ந்தவர். அடுத்து மந்திரி, மூன்றாவதாக காவலாளி, அதைத் தொடர்ந்து மற்ற பணியாளர்கள் இருப்பார்கள் மந்திரி காவலாளியைப் பார்த்து காவலாளியிடம். 'அரசனை கைது செய்' என்று சொன்னால் காவலாளி அரசனை கைது செய்வானா? செய்யமாட்டான்.

அதே சமயம் அரசன் காவலாளியிடம் 'மந்திரியை கைது செய்' என்று ஆணையிடால் உடனே காவலாளி மந்திரியை கைது செய்வான். ஏன்னென்றால் அரசனுக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது. யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம். அதே போன்று சர்வ வல்லமை படைத்த இறைவனுடன் இணைந்த குருவிற்கு எல்லா அதிகாரமும் உள்ளது. இறைவனின் அவதாரமே குருதேவர். எனவே குருவின் போதனைகளை பின்பற்றினால் இறைவனை அடையலாம் இறைவனுக்காக நேரம் ஒதுக்கச் சொல்கிறார் குருதேவர். அவ்வாறே நாம் நடந்தால் நிச்சயமாக இறைவனிடம் இணையலாம். நம்மை குருதேவரே இறைவனிடம் இணைத்துவிடுவார்.

மீண்டும் மலரும்... குருப்ரியா (வசுமதி)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள், மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ் புக் ஒர்க்,
அட்டைப்பட வடிவமைப்பு, நாளிதழ்கள்,
போன்றவை தரமாகவும் குறைந்த
செலவில் செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: 08825844033

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

# மகான்களை எவ்வாறு அறிவது

ஒரு சாதாரண மனிதனால் ஆன்மீக முன்னேற்றத்தில் உச்ச நிலையை அடைந்துள்ள ஒரு மகானை அடையாளம் காண இயலாது. இதைப் புரிந்து கொள்வதற்கு சில உதாரணங்களைப் பார்ப்போம். (படம்)

அதே போன்று ஒருவர் ஆன்மீகத்தில் அடைந்துள்ள மன பரிபக்குவத்தையும் அவர் ஆன்மீகத்தில் எவ்வளவு உயர்ந்த மகான் நிலையில் உள்ளார் என்பதையும் அதே போன்று ஆன்மீகத்தில் உன்னத நிலையை அடைந்த மகானாலேயே உணர முடியும்.

ஒரு சராசரி மனிதனோ அல்லது மத நம்பிக்கை உள்ள மனிதனோ அல்லது ஒரு பக்குவப்பட்ட ஸாதகரோ கூட மற் றொரு மனிதன் ஒரு மகான் நிலையில் உள்ளவரா என்பதை நிர்ணயிக்கும் தகுதி உள்ளவர் களாக மாட்டார்கள். ஒரு ஸாதகரால் கூட தன்னை விட 20% ஆன்மீக நிலையில் உயர்ந்துள்ள ஒருவரையே அடையாளம் கண்டுபிடிக்க இயலும்.

ஏனெனில் 20% மேல் ஆன்மீக நிலையில் வித்தியாசம் ஏற்பட்டால் அதிர்வலைகளில் ஏற்படும் வித்தியாசம் சாதாரணமாக உணர முடியாத அளவிற்கு அதி ஸூட்சும நிலையில் இருக்கும்.



சமுத்திரத்தின் ஆழத்தை ஒரு கயிற்றைக் கொண்டு நாம் அளக்க விரும்பினால் அந்த கயிற்றின் நீளம், கடலின் ஆழத்தை விட அதிகமாக இருக்க வேண்டும்.



நான்காம் வகுப்பில் படிக்கும் ஒரு பையனிடம் ஒரு பட்டதாரி மாணவன் மற்றும் ஒரு போஸ்ட் டாக்டரேட் மாணவனிடம் உள்ள விஷய ஞானத்தின் வித்தியாசத்தைக் கேட்டால் படத்தில் உள்ளது போன்ற 'எனக்குத் தெரியாது' என்ற பதிலையே நாம் பெறுவோம்.



ஒரு மருத்துவரின் திறமையை மற்றொரு மருத்துவரோ அல்லது ஒரு பொறியியல் நிபுணரின் திறமையை மற்றொரு பொறியியல் நிபுணரோ தான் உணர முடியும்.

## இரு மகான்களுக்கிடையே உள்ள வித்தி யாசத்தைக் கண்டறிதல்

ஆன்மீக பயிற்சி செய்யும் பழக்கமுள்ள ஸாதகராலோ அல்லது ஆன்மீக பயிற்சி எதுவும் செய்யாத சாதாரண மனிதனாலோ இரு மகான்களுக்கிடையே ஆன்மீக அளவில் உள்ள வித்தியாசத்தை எடை போட இயலாது.

## எந்த மகானை நாம் பின்பற்றுவது?

ஐம்புலன்கள், மனம் மற்றும் புத்தி இவைகளின் மூலமாகவே ஒரு சாதாரண மனிதன் உலகைப் புரிந்து கொள்ள இயலும்.

ஒரு மகான் என்றால் அவர் எப்படி இருப்பார், அவரது நடவடிக்கைகள் எப்படி இருக்கும் என்று ஒரு கற்பனையான தோற்றத்தை மக்கள் தங்கள் மனங்களில் உருவாக்கி வைத்திருப்பார்கள். ஆன்மீகத்தை சரியாக புரிந்து கொள்ளாத குறுகிய கண்ணோட்டத்தின் அடிப்படையில் கூட இது இருக்கலாம். இதனால் யாரை மகானாக கருதி பின்பற்றுவது என்பதில் அவர்கள் தவறான முடிவு எடுப்பதற்கு கூட வாய்ப்புள்ளது. அதன் காரணமாக அவர்களால் :



1. ஆன்மீகத்தில் உயர்ந்த நிலையில் உள்ளவர்களிடமிருந்து வெளிப் படும் ஸூட்சும ஆன்மீக அதிர் வலைகளை உணர முடியாமல் போகிறது.
2. அந்த மகான் உயர்ந்த ஆன்மீக நிலையில் உள்ளார் என்பதை ஆன்மீகத்தில் உயர்ந்த நி லை யி ல் உ ள் ள ம ற் றொரு மகான் சொன் னால் தான் அவர்களுக்கு புரியும். இல்லாவிட்டால் அந்தசாதுவின் உயர்ந்த ஆன்மீக நிலையை அவர்களால் புரிந்து கொள்ள இயலாது.

இது சாதாரண ஸாதகர்களை சந்தேகத்தில் ஆழ்த்தும். ஒரு பக்கம் நாம் மகான்களை, நம்மை ஆன்மீகத்தில் கரை சேர்க்கும் கலங்கரை விளக்கமாக நினைக்கிறோம். மறுபக்கம் யார் உண்மையான மகான் என்று நம்மால் புரிந்து கொள்ள இயலாதபோது யாரை நாம் மகான் என்று நம்புவது?

இதற்கு பதில் என்னவென்றால் ஒரு ஸாதகன் ஆறு கோட்பாடுகளை அடிப் படையாகக் கொண்ட ஆன்மீக பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

கடவுளை உணர வேண்டும் என்ற முயற்சியில் இவன் ஒரு அடி முன்னோக்கி வைத்தால் இறைவன் இவனுக்கு உதவ பத்து அடிகள் இவனை நோக்கி எடுத்து வைக்கிறார். மேலும் அவனது ஆன்மீக வேட்கைக்கும் தகுதிக்கும் ஏற்றபடி வழி காட்டும் தக்க ஆன்மீக குருவையும் காட்டிக் கொடுக்கிறார்.

– மேலும் விவரங்களுக்கு:
hindujagruti தொ.எண்: 9380949626

# மனிதருக்குள் இயங்கும் Google

நம் இன்று நவின மையம் ஆக்கப்பட்ட உலகத்தில் வாழ்கிறோம் நமக்கு ஒரு தகவல் தெரியவேண்டும் என்றால் நாம் யாரையும் எதிர்பார்க்க வேண்டிய தேவையில்லை Google மூலம் நடந்தது நடப்பது நடக்கப்போவது என முக்காலத்தையும் நாம் அறிந்துகொள்ளமுடியும்.

ஆனால் எந்த வித தொழில்நுட்பமும் இல்லாத காலத்தில் வாழ்ந்த மக்களால் எப்படி எதிர்காலத்தை பற்றி கணிக்க முடிந்தது அவர்களால் எப்படி முக்காலத்தையும் உணர முடிந்தது.

எடுத்துக்காட்டாக இன்று நாம் செயற்கை கோள்கள் (Satellite) மூலம் வாணத்தில் உள்ள கோள்களை (Planets) நாம் அறிய முடிகிறது ஆனால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம்முன்னோர்கள் எப்படி நவகிரகங்களை வைத்து வழிபட்டனர்?

ஏன் இன்றும் நம் கிராமபுரங்களில் உள்ள மக்கள் எந்த விதமான நவின தொழில்நுட்பம் உதவி இன்றி குறி சொல்லுவது அதாவது பின்பு நடப்பதை முன்கூட்டிய உணர்ந்து சொல்வது ஆவிகளுடன் பேசுவது போன்ற ஆச்சரியம் தரும் செயல்களை செய்கின்றனர்.இத்தனைக் கும் அவர்கள் தங்கள் வாழ்வில் பெரியளவுக்கு எந்த புத்தகத்தையும் படிப்பது கூட இல்லை இப்படி இருக்க இவை எல்லாம் அவர்கள் எப்படி செய்கின்றனர்?

## எதன் உதவியோடு செய்கின்றனர்?

அதன் பெயர் தான் ஆழ்மனது (Super conscious mind)

நம் மனதானது மொத்தம் மூன்று பிரிவு களை உடையது மேல்மனது (Conscious mind) நடுமனது (sub conscious mind) ஆழ்மனது (Super conscious mind)

இதில் மிகவும் முக்கியமானது ஆழ்மனது இந்த ஆழ்மனது முக்காலத்தையும் உணர்ந்தது இந்த ஆழ்மனதுக்கு எது நடந்தது எது நடக்க விருக்கிறது என்று அனைத்தும் தெரியும் காரணம் ஆழ்மனது பிரபஞ்சத்துடன் (Galaxy) தொடர்புடையது. அதில் இவ்பிரபஞ்சத்தின் சக்தி நிறைந்துள்ளது.புரியும் படி சொல்ல வேண்டும் என்றால் மேல்மனது என்பது நாம் நடுமனது என்பது நமக்கும் கடவுளுக்குமான இடைப்பட்ட பாதை ஆழ்மனது என்பது தான் கடவுள். எவன் ஒருவன் மேல்மனதில் இருந்து நடுமனதை கடந்து ஆழ்மனதை அடைகிறானோ அவன் கடவுள் நிலையை அடைகிறான், அதாவது முக்காலத்தையும் உணர்ந்தவன் ஆகிறான்.

அதுனால் தான் குழந்தையும் தெய்வமும் ஒன்று என்று சொல்வார்கள் காரணம் குழந் தைகள் எப்பொழுதும் ஆழ்மனதில் தான் இருப்பார்கள். குழந்தைகளுக்கு எதிர்காலத்தை கணிக்கும் சக்தியுள்ளது ஆகையால் தான் ஏதேனும் தீயசெயல் அவ்விடத்தில் நடக்க இருந்தால் குழந்தைகள் சம்மந்தமே இல்லாமல் அழத்தொடங்கும்.

குழந்தைகளுக்கு அடுத்தபடியாக சித்தர்களும் விலங்குகளும், எப்பொழுதும் ஆழ்மனதில் தான் இருப்பார்கள் சித்தர்கள் எந்த விதமான நூல்களையும் படித்திருக்க மாட்டார்கள் ஆனால் அவர்களுக்கு இவ் உலகில் தெரியாத விசயம் என்று ஒன்றும் கிடையாது காரணம் அவர்கள் பிரபஞ்ச நூலகத்தையே படித்தவரார்கள்.

மேலும் விலங்குகள் விலங்குகளும் எப் பொழுது ஆழ்மனதில் தான் இருக்கும் அவைகளுக்கு என்ன நடக்கபோகிறது என்பது முன்கூட்டியே தெரியும்.

எடுத்துக்காட்டுக்கு 2004 ஆம் ஆண்டு வந்த சுனாமியை விலங்குகள் முன்கூட்டிய கணித்து சுனாமி வரும்முன்னரே காகங்கள் மிகுந்த ஓசையை எழுப்பி எச்சரித்தது நாய் முதல் ஈ எறும்பு வரை இச்சம்பவத்தை முன்கூட்டியே அறிந்து பாதுகாப்பான இடத்திற்கு சென்று பதுங்கிவிட்டது 6 அறிவு படைத்த மனிதன் மட்டும் தான் சுனாமி என்றால் என்னவென்றே தெரியாமல் இறந்து போனான்.

ஏன் சித்தர்களும் குழந்தைகளும் விலங்குகளும் எப்பொழுதும் ஆழ்மனதிலே இருக்கிறார்கள்.

ஏன் சாதரண மனிதனால் ஆழ்மனதிற்கு செல்ல முடியவில்லை என்றால் நான் மேலே சொன்னது போல் நடுமனது தான் காரணம் ஒரு மனிதன் தன் வாழ்வில் படும் கஷ்டங்களுக்கு காரணமே இந்த நடுமனது தான் காரணம் நமக்கு நம் நடுமனதானது தேவையற்ற குப்பைகள் ஆன பகை வஞ்சம் வருத்தம் கவலை (feelings) போன்ற வற்றால் நிறைந்திருக்கும் ஞானிகளுக்கு கவலை வஞ்சம் என்பதே கிடையாது (they don't have feelings they only have memory) ஆகையால் அவர்கள் நடுமனது சுத்தமாக இருக்கும் அவர்களால் எளிதில் ஆழ்மனதிற்கு செல்ல முடியும்.

சரி சாதரண மனிதன் ஆழ்மனதிற்கு செல்வதே கிடையாதா என்றால், அதுவும் கிடையாது சில நேரம் நம்மை அறியாமையே நமக்குள் இருந்து ஒரு குறள் கேட்கும் அது



தான் ஆழ்மனதின் குறள்.

எடுத்துக்காட்டு: நாம் வீட்டை விட்டு வெளியில் செல்லும் போது, சமந்தமே இல்லாமல் நம் கண்கள் குடையை பார்க்கும். எதோ ஒரு குறள் உணர்வு நம்மை "குடை கொண்டு போ மழை வரபோகுது" என்று சொல்லும், ஆனால் நாம் அதை பெரிதுபடுத்தாமல் சென்றுவிட்டு மழையில் நனைத்து விட்டு 'சே அப்போவே தோனுச்சி நா தான் கேக்கல'னு சொல்லுவோம். இந்த அப்போவே தோனுச்சி என்பது தான் ஆழ்மனதின் குறள் ஆழ்மனது நமக்கு சொல்லும் செய்தி ஆனால் இதை நாம் யாரும் கண்டுகொள்வதில்லை.

நாம் மட்டும் நமது ஆழ்மனதின் குறளை கேட்டு நடந்தோம் என்றால் நமக்கு பிரச்சனை என்பதே வராது.

நம் ஊர்களில் சில நபர்களுக்கு அசரிரி கேட்கும் சில நபர்களுக்கு கனவில் நடக்க விருப்பது முன்கூட்டியே தெரியும். அவர்களை கேட்டால் "கடவுள்தான் அசரிரி மூலமாகவும், கனவின் மூலமாகவும் எனக்கு எதிர்காலத்தை சொன்னான்" என்பார்கள்.

ஆனால் அது கடவுள் எல்லாம் ஒன்றும் கிடையாது, அது அவர்களின் ஆழ்மனது அவர்களுக்கு சொல்லும் செய்தி.

எனவே உங்களுக்கு ஒரு தகவல் தெரிய வேண்டும் ஒரு விசயம் புரியவேண்டும் என்றாலோ நீங்கள் யாரிடமும் கேட்க வேண்டிய தேவையில்லை உங்களுக்கு உள்ளே உங்களுக்கு வேண்டியவற்றை மீண்டும் மீண்டும் கேளுங்கள் அல்லது அதை நினைத்து கொண்டே இருங்கள் நிச்சயம் உங்கள் ஆழ்மனது உங்களுக்கு பதிலை தரும் இது GOOGLE மூலம் கிடைக்கும் பதிலை விட உண்மையானது சுத்தமானது.

ஆனால் முடிந்த அளவு உங்கள் நடுமனதை (Sub conscious) சுத்தமானதாக வைத்து கொள்ளுங்கள் அப்படி செய்தால் உங்களால் உங்கள் ஆழ்மனதிற் (super conscious) உள்ளே எளிதில் நுழைய முடியும் விரைவில் செல்ல இயலும்.

– கோகுல மணிகண்டன் சான்றார்
தொடர்பு எண்: 09677359474



www.aanmeegamalar.com



# ஆரோக்கியம் தரும் மருத்துவ குறிப்புகள்

1. மிளகுபொடி, சுக்குப்பொடி, தண்ணீர் போட்டு கஷாயமாக்கி பாலும், வெல்லமும் சேர்த்து பருகினால் உடம்பு வலி தீரும்.

2. சுத்தமான வெள்ளாட்டுப் பாலில் ஒரு கரண்டி இஞ்சிச் சாற்றை கலந்து கொடுத்தால் குழந்தைகளுக்கு சளித்தொல்லை இருக்காது.

3. முள்ளங்கிக் கிழங்கின் சாறோடு மருதாணி வேரை இடித்து சேகரித்த சாற்றையும் சேர்த்து துளிகளாக காதில் விட்டுவர, குணம் தெரியும்.

4. வாழை மரத்துக் கிழங்கை இடித்து எடுத்து சாற்றை சற்று சூடாக்கி துளிகளாக காதில் விட்டால் காது வலிக்கு நல்ல பலனைத் தரும்.

5. தும்பைப்பூ, சுக்கு, காயம் இவற்றை எடுத்து நைத்து கடுகு எண்ணெயில் போட்டு காய்ச்சி காதில் சில துளிகள் விட்டால் குணமாகும்.

6. மாதுளம் பழத்தின் ரசத்தை சூடாக்கி இளம் சூடாக இருக்கும்போது சில துளிகள் காதில்விட வலி குறையும்.

7. சுக்கு, மிளகு, திப்பிலி, லவங்கப்பட்டை, சத குப்பை, காயம், அதிவிடயம் ஆகிய சரக்குகளை சமஅளவு எடுத்து அரைத்து சிறிதளவு நல்லெண்ணெயையும் காடியையும் அதனுடன் சேர்த்து காய்ச்சி, அந்த எண்ணெயை காதில் சில துளிகள் விட்டு வந்தால் காது இரைச்சல் அகலும்.

8. தேவதாரு, கோஷ்டம், சிற்றாமல்லி, முன்னை, பேராமல்லி முதலியவற்றை தனித்தனி யாக இடித்து நல்லெண்ணெய் விட்டுக் காய்ச்சி, ஆறவைத்து ஒவ்வொரு தைலத்திலும் ஒவ்வொரு துளி கலந்து காதிலே விட்டு பஞ்சடைத்து வந்தால், காதில் ஏற்படும் வலியுடன் ஒழுக்கு இருந்தால் குணமாகும்.

7. ரோஜாமொக்கு, சுக்கு, ஏலக்காய், கொத்து மல்லி வகைக்கு 5 கிராம் எடுத்து இளவறுப்பாக வறுத்து அம்மியில் வைத்து பெரும் பருக்கையாக உடைத்து வைத்துக்கொண்டு காலை, மாலை சாப்பிட்டு வந்தால் தேக உஷ்ணம் சமப்படும்.

8. நிம்மதியான உறக்கத்தைப் பெற ஒரு தேக்கரண்டி கசகசாவை எடுத்து இரண்டு முந்திரி பருப்பு சேர்த்து அரைத்து பசும்பாலில் கலந்து காய்ச்சி சிறிது கற்கண்டும் சேர்த்து பருகினால் நிம்மதியான உறக்கத்தைப் பெறலாம்.

9. சூட்டினால் ஏற்படும் வலியாக இருந்தால் தொப்புளைச்சுற்றி ஒரு ஸ்பூன் விளக்கெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் தடவி தொப்புளுக்குள்ளும் விடலாம்.

10. வயிற்று எரிச்சல் சுக்குத்தூளை கரும்புச் சாற்றுடன் கலந்து சாப்பிட, வயிற்று எரிச்சல் தீரும்.

11. தொண்டைக்கட்டு ஜலதோஷத்தினால் தொண்டை கட்டிக் கொண்டால் மிளகைப் பொடி செய்து, ஒரு ஸ்பூன் நெய்யை சூடு செய்து அதில மிளகுப் பொடியை சேர்த்துக் குடித்தால் தொண்டைக் கட்டு விலகும்.

12. வெள்ளரிக்காய் விதையை அரைத்து அத்துடன் ஐந்து பங்கு நீர் சேர்த்து கரைத்து வடிகட்டி சர்க்கரை சேர்த்துக் கொடுக்க நீரடைப்பு, நீர் எரிச்சல் ஆகியவை போகும். பசி கொடுக்கும் ஆற்றலும் வெள்ளரிக் காய்க்கு உண்டு.

13. பெருங்காயத்தை நீரில் கரைத்து ஒரு சங்களவு எடுத்து சிறிது ஓமத்தையும் சேர்த்துக் கொடுக்க குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தம், வயிற்றுப் பொருமல் போகும்.

14. மிளகையும் எருக்கம்பூவையும் சம எடை எடுத்து நன்றாக அரைத்து பனை வெல்லம் கூட்டி சிறு குளுகை செய்து சாப்பிட்டால் இழுப்பு நோய் குணமாகும்.

15. சீரகத்துடன் மிளகைச் சேர்த்துச் சாப்பிட அஜீரணம் போகும். சீரகத்தை அரைத்து எலுமிச்சை சாற்றுடன் கலந்துகொடுக்க கர்ப்பிணிகளின் வாந்தி நிற்கும். சுண்ணாம்பில் ஊற வைத்த, பொடித்த சீரகம், வயிற்று ஜீரண நீரைச் சீர்படுத்தி அல்சர் நோயைக் கட்டுப்படுத்தும்.

16. ஒரு தம்ளர் வெந்நீரில் ஒரு ஸ்பூன் சக்கரை, ஒரு ஸ்பூன் நெய் விட்டு கலக்கிக் குடித்தால் வயிற்று வலி மாயமாய் மறைந்துவிடும்.

17. உடல் பருமனைக் குறைக்க இரவு ஒரு ஸ்பூன் ஓமத்தைத் தண்ணீரில் போட்டு, காலையில் வடிகட்டி ஒரு ஸ்பூன் தேனுடன் கலந்து குடித்து வந்தால் போதும்.

18. அவரை இலையை அரைத்து தினமும் காலையில் முகத்தில் தடவி வந்தால், முகத்தில் இருக்கும் தழும்புகள், முகப்பருக்கள் நீங்கிவிடும்.

19. பால் கலக்காத தேநீரில் தேன் விட்டுக் குடித்தால் தொண்டைக்கட்டு சரியாகும்.

20. சுக்கைத் தூளாக்கி எலுமிச்சைச் சாறில் கலந்து தின்றால் பித்தம் குறையும்.

21. மூட்டு வலியா? தேங்காய் எண்ணெய் எலுமிச்சைச் சாறை கொதிக்கவிட்டு ஆறியபின் மூட்டுக்களில் தேய்த்தால் நிவாரணம் கிடைக்கும்.

22. துளசி இலை போட்ட நீரை தினசரி குடித்து வந்தால் ஞாபகமறதி நீங்கி மூளை பலம் பெறும்.

23. மிளகுத் தூளுடன் நெய், வெல்லம் கலந்து உருண்டையாக்கி சாப்பிட்டுவர தொண்டைப்புண் குண மாகும்.

24. வாயில் புண் இருந்தால் வயிற்றிலும் இருக் கலாம். தினமும் காலையிலும் மாலையிலும் தேங்காய் பாலில் தேனை விட்டுச் சாப்பிட்டால் புண் ஆறிவிடும்.

25. அஜீரணத்திற்கு இரண்டு ஸ்பூன் கருவேப்பிலைச்சாறை ஒரு டம்ளர் மோரில் கலந்து குடித்தால் அஜீரணம் நீங்கும்.







www.aanmeegamalar.com



ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033

# பெரிய விருப்பம் உடம்போடு இணைந்த உணர்வு

❖ குழந்தைகளின் ஆரம்பப் பள்ளியிலிருந்து ஒரு ஆண் குழந்தைக்கு ஒரு பெண் குழந்தையும், ஒரு பெண் குழந்தைக்கு ஒரு ஆண் குழந்தையும் கட்டாயம் நட்பு உறவுக்காகத் தேவைப்படுகின்றன. இக்குழந் தைகளின் உள்ள, மன நிலைமை சமன்பாடுகளுக்கு இம்முறை மிகவும் அவசியமானது. எதிர்மறை உணர்வில் ஈர்ப்பு வைக்கப்பட்டிருக்கிறது. அதுவே நட்பு எனப்படும்.

❖ நல்ல உலக அனுபவத்திற்கு உலகில் புரிந்து கொள்ளுகின்ற ஆண், பெண் இவர்களின் செயல்பாடுகளே நல்லுறுதியாய் விளங்குகின்றன. இத்தகைய சூழ்நிலை செயல்பாடுகளுக்கு வடிவம் இருந்தால் ஒரு மனிதனிடத்திலிருந்து பெரும்பேராசை என்பதுதானே வெளியேறிவிடுகின்றது.



❖ மிகப்பெரிய உள்ளத்தின் எண்ணம் என்பதும் பெரிய விருப்பம் என்பதும் ஒன்றுக்கொன்று இணைந்ததே. பெரிய விருப்பம் என்பது உடம்போடு இணைந்த உணர்வு; பெரிய எண்ணம் என்ற உள்உணர்வு மன இயக்கத்தோடு இணைந்தது. நீ இந்த இரண்டு வேகத்திற்கும் சுதந்திரம் அளித்தால் அதன் எதிரொலியாக நன்மையே உனக்கு கிடைக்கும். கெட்ட உள்நோக்கங்கள் உருவாகவே ஆகாது. எண்ணத் தையும் விருப்பத்தையும் ஒன்றாகச் சேர்த்து ஆசையாக்கிவிடாதே. ஆசையின் பிறப்பல்ல உயிர். அன்பின் வடிவமே மனிதன். இதுவே சமுதாயத்திற்கு என்பது உபதேசம் ஆகும்.

❖ இருபாலர் இணைந்து படிக்கும் கல்வி நிலையங்கள் நாட்டில் கட்டாயம் இருக்க வேண்டும். இதை சமுதாயம் எப்படி எடுத்துக் கொள்ள வேண்டும் தெரியுமா? தவறாக எடுத்துக் கொள்ளாமல் சிந்தனையின் உயரத்திற்கு இக்கருத்தை எடுத்துச் செல்ல வேண்டும். அப்படிச் செய்தால் மக்களின் மனநிலை விரிவடைந்து பரவுகிறது. இதில் அதிக இலாபங்களும் இருக்கின்றன. சிற்சில சமயங்களில் இம்முறையில் அங்கும் இங்குமாக சில தவறுகள் நிகழலாம். இது உலகில் எல்லா இடங்களிலும் எல்லாத் துறைகளிலும் இருக்கின்றன.

❖ முழுமை அடைந்த மனிதன் அல்லது முழுமை அடைந்த பெண் என்றால் என்ன? ஒரு பெண் ஒரு ஆண் இவர்களின் முழுமை என்ன? முழுமை அடையாத ஒரு ஆண், பெண் இவர் களின் வடிவ இயக்கமென்ன? முழுமையடைந்த மனிதர்களின் உள் ளத்தில் இம்மூன்று பிரிவுகளைப் பற்றிய சிந்தனை ஒரு தவிர்க்க முடியாத சிந்தனையாக இருந்து கொண்டிருக்கிறது. மேற்சொன்ன சிந்தனை களுக்கு முடிவுதான் என்ன? நீ உனது உணர்வு உறுப்புகளை ஒரு குதிரையின் கடிவாளத்தைப் போன்று உனது கையிலேயே வைத்துக் கொண்டிரு. எல்லாம் தெரியும். அனைத்தையும் அலசி ஆராயலாம்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# உழைப்பிற்கு கூலியாக மாறிய பன்னீர் இலை விபூதி



"அபஸ்மார குஷ்டக்ஷயார்ச ப்ரமேஹ
ஜ்வரோந்மாத குல்மாதிரோகா மஹாந் தஹ
பிசாசஸ்ச சர்வே பவத் பத்ரபூதிம்
விலோக்ய க்ஷணாத் தாரகாரே த்ரவந்தே"

**பொருள்**

"தாரகாசுரனை வதம் செய்தவனே! வலிப்பு, காசம், குஷ்டம், சுரம், மேகவெட்டை, குடல்புண், புற்றுநோய், பிசாசு மற்றும் மனப்பயம் எனும் நோய்களனைத்தும் பன்னீர் இலையில் வைத்துத் தரப்படும் உன் திருநீற்றைப் பார்த்த மாத்திரத்தில் பறந்தோடி மறைந்துவிடும்."

ஆதிசங்கரர் திருச்செந்தூரில் பாடிய சுப்ரமண்ய புஜங்கத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

பார்த்த மாத்திரத்திலேயே நோய்களைப் பறக்கடிக்கும் என்று அவர் குறிப்பிடும் 'பத்ர பூதி' என்பதுதான் பன்னீர் இலை விபூதி.

**விபூதியின் வரலாறு**

'பத்ர' என்பது இலை. பூதி என்பது நீறு. செந்திலாண்டவன் திருக்கோயிலில் இறைவனது பிரசாதமாகிய திருநீறு, பன்னீர் இலையில் வைத்துத் தரப்படுகிறது. இதன் மணமே தனித்தன்மை உடையதாக இருக்கும்.

இலையினால் விபூதியின் மணம் இன்னும் அதிகரிக்கிறதோ என்று கூடத் தோன்றுகிறது. என்னவானாலும் சரி, இலை விபூதியில் செந்திலாண்டவனின் அருள் மணம் வீசுகிறது என்பதுதான் நிஜம்.

**இலை விபூதியின் வரலாறு:**

செந்தூரில் சூரபத்மாதியர்களை வதம் செய்த முருகன் வெற்றி ஒளி வீசி திருச்செந்தூர் கடற்கரையில் நின்றான். அவனது பெருமையைத் துதித்த வேதங்களனைத்தும் ஒன்று சேர்ந்து செந்திலோனின் மகிமையை விளக்கும் பன்னீர் மரங்களாக இவ்விடத்தில் தோன்றின.

எனவே இவற்றின் இலைகளும் வேத மந்திர சக்தியை உடையவை என்கிறது புராணம். பன்னீர் இலையில் பத்திரப்படுத்தப்படும் விபூதியிலும் வேத மந்திர சக்திகள் நிறைந்து விடுகின்றன. தவிர, பன்னீர் இலையில் காணப்படும் 12 நரம்புகள் முருகனது பன்னிரு கரங்களை நினைவூட்டுவனவாக அமைந்துள்ளன. தாடகை எனும் பெண்ணை ராமபிரான் மூலமாக வதம் செய்த காரணத்தினால் தனக்கு ஏற்பட்ட குன்மம் முதலான நோய்கள் தீர, ராமபிரான் தன் கனவில் கூறியபடி, செந்திலாண்டவன் இலை விபூதியைத் தரித்துக் கொண்டு நோய்கள் நீங்கப் பெற்றார் விசுவாமித்திர மகரிஷி.

**ஆதி சங்கரருக்கு**

ஆதி சங்கரரது வாழ்விலும் இலை விபூதி மகிமையை விளக்குவதான ஒரு சம்பவம் ஏற்பட்டது. அவருடன் ஏற்பட்ட வாதங்களில் தோற்ற அபிநவகுப்தர் என்பவர், ஆபிசார வேள்வி செய்து சங்கரருக்கு உடலை வருத்தும் நோய் உண்டாகச் செய்து விட்டார்.

அக்காலத்தில் அவர் வட கர்நாடகாவிலுள்ள கோகர்ணத் திருத்தலத்தில் தங்கி வழிபாடு செய்து வந்தார். ஒரு நாள் இரவு, இறைவன் அவர் கனவில் தோன்றி, "என் குமாரன் ஷண்முகன் குடியிருக்கும் புண்ணியத் தலமான செயந்திபுரம் எனும் திருச்செந்தூர் சென்று அவனைத் தரிசித்தால் உன் நோய் முற்றிலுமாக நீங்கப் பெறுவாய்" என்று கூறினார். உறங்கி எழுந்து பார்த்த சங்கரரின் அருகில் விபூதி இருந்தது.

கோகர்ணேஸ்வரர் ஆணைப்படி, செந்தூர் வந்தடைந்தார், ஆதிசங்கரர். கடலில் நீராடி, பின் இறைவன் சன்னதியில் மனமுருகி நின்றபோது, ஆதிசேஷனாகிய பாம்பு ஊர்ந்து ஊர்ந்து இறைவன் சன்னதியை அடைந்ததைக் கண்டார். அதே நேரம் அவருக்கும் இறை தரிசனம் கிட்டியது.



அவன் அருளாலே, மடை திறந்த வெள்ளம் போல அவர் திருவாயிலிருந்து சுலோகங்கள் வெளிவந்தன. வடமொழியில் பாம்பை புஜங்கம் என்பர். வடமொழி இலக்கணப்படி, புஜங்க விருத்தமாக அமைந்தன பாடல்கள். பாடி முடித்து இலை விபூதியைப் பெற்று அணிந்து கொண்ட சங்கரருக்கு வெகு விரைவில் நோய் குணமாயிற்று.

ஆதிசங்கரர் நினைத்திருந்தால், தானே நோயை விரட்டி இருக்க முடியும். ஆனால் மானுட அவதாரத்தில், அத்துயரை, தானே அனுபவித்து உலகோருக்குப் பத்ர பூதியின் பெருமையை வெளிப்படுத்த நிகழ்த்தப்பட்ட திருவிளையாடலே இது.

## விபூதியே கூலி

சுமார் 350 ஆண்டுகளுக்கு முன் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ தேசிகமூர்த்தி தம்பிரானவர்கள் செந்தூர் மேலக் கோபுரத்தை நிர்மாணித்தார். பொருள் பற்றாக் குறை ஏற்படவே, கூலியாட்களுக்குக் கூலிக்குப் பதிலாக இலை விபூதியைக் கொடுத்து, தூண்டுகை விநாயகர் கோயிலைத் தாண்டிச் சென்றபின் திறந்து பார்க்கும்படிக் கூறினாராம். அதன்படி திறந்து பார்த்தபோது, தத்தம் வேலைக்குரிய கூலி வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து மெய் சிலிர்த்தனர் என்கிறது கோயில் வரலாறு.

திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் பாடிய பகழிக் கூத்தர் வாழ்விலும் இலை விபூதி பெரும் அற்புதத்தை நிகழ்த்தியது. தீராத வயிற்று வலியால் துடித்த அவரது கனவில் கோயிலில் பூஜை செய்யும் உரிமையுடைய திரிசுதந்திரர் போல ஒருவர் தோன்றினார்.

"என் புகழைப் பிள்ளைத் தமிழால் பாடு, உன் நோய் குணமாகும்" என்று கூறி இலை விபூதியைக் கையில் கொடுத்திட்டு மறைந் தாராம். உரையாசிரியர் குகஸ்ரீ ரசபதி அவர்கள், திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் உரையில் இதுபற்றி விரிவாகக் குறிப்பிட் டுள்ளார்.

கந்தர் கலி வெண்பா பாடிய குமரகுருபரரின் சரித்திரத்தை எழுதியருளிய வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள், செந்தூர் ஆலயத்தில் அர்ச்சகர்கள் இலை விபூதிப் பிரசாதத்தை எடுத்து வழங்குவதைக் குமரகுருபரர், தான் கண்டபடி அழகாகப் பாடியுள்ளார்.

"இலையமில் குமரவேள் முன் வணங்குவார்க்கு என்றும் துன்பம்
இலை. அடுபகை சற்றேனும் இலை. படுபிணி நிரப்பும்
இலை, அளற்றுழன்று வீழ்தல் இலை,பல பவத்துச் சார்பும்
இலை என இலை விபூதி எடுத்தெடுத்துதவல் கண்டார்"

என்று பாடுகிறார்.

விபூதியின் மகிமையைப் பாடவந்த அருணகிரிநாதரும்,

"ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடும் அடியார்கள்
பதமே துணையதென்று..."

என்று பாடுகிறார்.

திருச்செந்தூருக்கு சென்றால் அவசியம் பன்னீர் இலை விபூதியை பெற்றுக்கொண்டு நோய் நொடிகளை அகற்ற மேற்கண்ட நிகழ்வுகள் ஒரு எடுத்துக்காட்டாக திகழ்கிறது.



- முருகனுக்கு விசாகன் என்றும் ஒரு பெயர் உண்டு. விசாகன் என்றால் மயிலில் சஞ் சரிப்பவன் என்பது பொருளாகும்.
- முருகனின் கோழிக் கொடிக்கும் குக்குடம் என்றோர் பெயருண்டு. இந்தக் கோழியே வைகறைப் பொழுதில் ஓங்கார மந்திரத்தை ஒளி வடிவில் உணர்த்துவது ஆகும்.
- பொருள், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்கிற ஆறு குணங்களே ஆறுமுகம்.
- முருகன் அழித்த ஆறு பகைவர்கள் ஆண வம், கன்மம், குரோதம், லோபம், மதம், மாற்சர்யம்.
- முருகனைப் பூஜிப்பதால் சிறப்புப் பெற்ற தலம் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள திருவிடைக்கழி. இங்கு முருகப்பெருமானுக்குப் பின்புறம் சிவலிங்கம் உள்ளது. (குரா மரத்தடியில் முருகன் பூஜித்தது) அது போல் திருவேற்காட்டில் வேலமரத்தடியில் முருகன் பூஜித்த சிவலிங்கம் முருகனுக்கு முன்புறமாக உள்ளது.
- முருகப்பெருமான் போர் புரிந்து அசுரர்களை அழித்த இடம் மூன்றாகும்.
  1. சூரபத்மனை வதம் செய்தது திருச்செந்தூர்,
  2. தாரகாசுரனை வதம் செய்தது திருப்பரங்குன்றம்,
  3. இந்த இருவரின் சகோதரனான சிங்க முகாசுரனை வதம் செய்தது திருப்போரூர் ஆகும்.
- திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில் மூலவரின் நெஞ்சில் சிறிய பள்ளம் இருக்கின்றது. சூரனை வதம் செய்யும் போது அவனோடு மோதியதால் இப்பள்ளம் ஏற்பட்டது.



# 12 ராசியும் ஒவ்வொன்றும் பெற்றுள்ள நற்பண்புகளும்

ஒவ்வொரு ராசியும் 9 விதமான நற்பண்புகளைக் கொண்டுள்ளது. இந்த நற்பண்புகளை அந்த அந்த ராசிக்குரியவரிடமும் இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

1. மேஷம், 2. ரிஷபம், 3. மிதுனம், 4.கடகம், 5. சிம்மம், 6. கன்னி, 7. துலாம், 8.விருச்சிகம், 9. தனுசு, 10. மகரம், 11. கும்பம், 12.மீனம் ஆகிய ஒவ்வொரு இராசி மண்டலமும் தனித்துவம் வாய்ந்தவை. அதன் படி ஒவ்வொரு ராசியும் பெற்றுள்ள சிறப்பம்சங்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது.

**மேஷம்** 1. வைராக்கியம் (Assertiveness) 2. தேசநலன் (Citizenship) 3. நிறைவேற்றுதல் (Chivalry) 4. துணிச்சல் (Courage) 5. கீழ்படிதல் (Obedience) 6. வெளிப்படையாக (Openness) 7. ஒழுங்குமுறை (Order) 8. ஏற்றுக்கொள்ளுதல் (Acceptance) 9. ஆன்மிகம் (Spirituality)

மேஷராசி ஜீரண மண்டலத்தின் ஆதாரமாகும்

**ரிஷபம்** : 1. கருணை (Mercy) 2. இரக்கம் (Compassion) 3. காரணம் அறிதல் (Consideration) 4. அக்கறையுடன் (Mindfulness) 5. பெருந்தன்மை (Endurance) 6. பண்புடைமை (Piety) 7. அஹிம்சை (Non violence) 8. துணையாக (Subsidiarity) 9. சகிப்புத்தன்மை (Tolerance)

ரிஷபராசி மண்டலமானது சிறுநீரக மண்டலத்தின் ஆதாரமாகும்

**மிதுனம்** : 1. ஆர்வம் (Curiosity) 2. வளைந்து கொடுத்தல் (Flexibility) 3. நகைச்சுவை (Humor) 4. படைப்பிக்கும் கலை (Inventiveness) 5. வழிமுறை (Logic) 6. எழுத்து கற்க பிரியம் (Philomathy) 7. è£óí‹ (Reason) 8. î‰Fóñ£è (Tactfulness) 9. ¹Kந்து கொள்ளுதல் (Understanding)

மிதுனராசி மண்டலமானது நரம்பு மண்டலத்தின் ஆதாரமாகும்.

**கடகம்** : 1. பிறர் நலம் பேணுதல் (Altruism ) 2. நன்மை செய்ய விரும்புதல் (Benevolence) 3. அறம் (Charity) 4. உதவுகின்ற (Helpfulness) 5. தயாராக இருப்பது (Readiness) 6. ஞாபகம் வைத்தல் (Remembrance) 7. தொண்டு செய்தல் (Service) 8. ஞாபகசக்தி (Tenacity) 9. மன்னித்தல் (Forgiveness)

கடகராசி மண்டலமானது ஐம்புலன் மண்டலத்தின் ஆதாரமாகும்.

**சிம்மம்** : 1. வாக்குறுதி (Commitment) 2. ஒத்துழைப்பு (Cooperativeness) 3. சுதந்திரம் (திக்ஷீமீமீபீஷீனீ) 4. ஒருங்கிணைத்தல் (Integrity) 5. பொறுப்பு (Responsibility) 6. ஒற்றுமை (Unity) 7. தயாள குணம் (Generosity) 8. இனிமை (Kindness) 9. பகிர்ந்து கொள்ளுதல் (Sharing)

சிம்மராசி மண்டலமானது தசை மண்டலத்தின் ஆதாரமாகும்.

**கன்னி** : 1. சுத்தமாயிருத்தல் (Cleanliness) 2. அருள் (Charisma) 3. தனித்திருத்தல் (Detachment) 4. சுதந்திரமான நிலை (Independent) 5. தனிநபர் உரிமை (Individualism) 6. தூய்மை (Purity) 7. உண்மையாக (Sincerity) 8. ஸ்திரத்தன்மை (Stability) 9. நல்ஒழுக்கம் (Virtue ethics)

கன்னிராசி மண்டலமானது தோல் மண்டலத்தின் ஆதாரமாகும்.



**துலாம்** : 1. சமநிலை காத்தல் (Balance) 2. பாரபட்சமின்மை (Candor) 3. மனஉணர்வு (Conscientiousness) 4. உள்ளத்தின் சமநிலை (Equanimity) 5. நியாயம் (Fairness) 6. நடுநிலையாக (Impartiality) 7. நீதி (Justice) 8. நன்னெறி (Morality) 9. நேர்மை (Honesty)

துலாராசி மண்டலமானது சுவாச மண்டலத்தின் ஆதாரமாகும்.

**விருச்சிகம்** : 1. கவனமாக இருத்தல்(Attention) 2. விழிப்புணர்வுடன் இருத்தல் (Awareness) 3. எச்சரிக்கையாக இருத்தல் (Cautiousness) 4. சீரிய யோசனை (Consideration) 5. பகுத்தரிதல் (Discernment) 6. உள் உணர்வு (Intuition) 7. சிந்தனைமிகுந்த (Thoughtfulness) 8. கண்காணிப்பு (Vigilence) 9. அறிவூட்டம் (Wisdom)

விருச்சகராசி மண்டலமானது நிணநீர் மண்டலத்தின் ஆதாரமாகும்.

**தனுசு**: 1. லட்சியம் (Ambition) 2. திடமான நோக்கம் (Determination) 3. உழைப்பை நேசிப்பது Diligence) 4. நம்பிக்கையுடன் (Faithfulness) 5. விடாமுயற்சி (Persistence) 6. சாத்தியமாகின்ற (Potential)7. நம்பிக்கைக்குரிய (Trustworthiness) 8. உறுதி (Confidence) 9. ஊக்கத்துடன் முயற்சி (Perseverance)

தனுசு ராசி மண்டலமானது எலும்பு மண்டலத்தின் ஆதாரமாகும்.

**மகரம்**: 1. கண்ணியம் (Diginity) 2. சாந்த குணம் (Gentleness) 3. அடக்கம் (Moderation) 4. அமைதி (Peacefulness) 5. சாதுவான (Meekness) 6. மீளும் தன்மை (Resilience) 7. மௌனம் (Silence) 8. பொறுமை (Patience) 9. செழுமை (Wealth)

மகரராசி மண்டலமானது நாளமுள்ள சுரப்பி மண்டலத்தின் ஆதாரமாகும்.

**கும்பம்** : 1. சுய அதிகாரம் (Autonomy) 2. திருப்தி (Contentment) 3. மரியாதை (Honor) 4. மதிப்புமிக்க (Respectfulness) 5. கட்டுப்படுத்துதல் (Restraint) 6. பொது கட்டுப்பாடு (Solidarity) 7. புலனடக்கம் (Chasity) 8. தற்சார்பு (Self Reliance) 9. சுயமரியாதை (Self-Respect)

கும்பராசி மண்டலமானது நாளமில்லா சுரப்பி மண்டலத்தின் ஆதாரமாகும்.

**மீனம்** : 1. உருவாக்கும் கலை (Creativity) 2. சார்ந்திருத்தல் (Dependability) 3. முன்னறிவு (Foresight) 4. நற்குணம் (Goodness) 5. சந்தோஷம் (Happiness) 6. ஞானம் (Knowledge) 7. நேர்மறை சிந்தனை (Optimism) 8. முன்யோசனை (Prudence) 9. விருந்தோம்பல் (Hospitality)

மீனராசி மண்டலமானது இரத்த ஓட்ட மண்டலத்தின் ஆதாரமாகும்.

# சிறு மலர்கள்

- அருப்புக்கோட்டை அருகிலுள்ளது திருச் சுழி என்ற ஊர். இங்குள்ள சிவன் கோயில் காணப்படும் நடராசர் பச்சிலை மூலிகையால் ஆனவர்.

- தஞ்சை அருகே தென்குடித் திட்டையிலுள்ள வசிஸ்டேஸ்வரர் ஆலய கருவறை விமானம் சந்திர காந்தக்கல் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. இக்கல் சந்திரனிடமிருந்து கிரணங்களைப் பெற்று நீராக்கி, அதை 24 நிமிடங்களுக்கு ஒருமுறை மூல லிங்கத்தின்மீது வீழச் செய்து அபிஷேகம் செய்கிறது. நாம் சாதாரணமாக கோயில் உண்டியலில் பணம், ஆபரணங்களைத்தான் காணிக்கையாகப் போடுவோம். ஆனால், இலங்கை கதிர்காம முருகன் ஆலயத்தில் காணிக்கையாக காசோலை (செக்) எழுதிப் போடுகின்றனர்.

- உலகிலேயே மிகவும் உயரமான முருகன் சிலை மலேசியா நாட்டின் தலைநகரான கோலாம் பூரில் இருந்து 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. 140 அடி உயரம் கொண்ட சிலை இது. தமிழக சிற்பிகள் 15 பேர் சேர்ந்துதான் இச்சிலையை உருவாக்கினார்கள்.

- திருக்கண்ணமங்கை தலத்தில் உள்ள தாயார் சன்னதியில் இரு ஜன்னல்கள் உள்ளன. இதில் தேனீக்கள் கூடு கட்டுகின்றன. தை மாதம் முதல் ஆனி மாதம் வரை சூரியன் வலப் பக்கம் சஞ்சாரம் செய்யும் போது தேனீக்கள் வலப்புற ஜன்னலில் கூடு கட்டுகின்றன.



- ஆடி மாதம் புதுக்கோட்டை மாவட்டம், பரக்கலக் கோட்டை ஆவுடையார் கோயில் திங்கட்கிழமை மட்டுமே திறந்திருக்கும். நள்ளிரவு 12.00 மணிக்கு மட்டுமே வழிபாடு. பிற நாட்களில் கோயில் மூடியிருக்கும்.

- ராமநாதபுரத்திற்கு வடகிழக்கே பத்து கிலோமீட்டர் தூரத்திலுள்ள திருப்புல்லாணி ஆதிஜெகந்நாதப் பெருமாள் கோயிலில் உள்ள அரசமரம் விழுது விடுகிறது. அதன் விழுது நிலத்தில் படிந்து மரமாகி விட்டால் மூலமரம் பட்டுப் போய்விடுமாம். பிறகு புதிய மரம் வளர்ந்து விழுது விடுமாம். இப்படி ஓர் அதிசய அரசமரம் தலவிருட்சமாக பெருமை சேர்க்கிறது.

- திவ்யதேசமான திருவட்டாறில் சயனக் கோலத்திலுள்ள பெருமாளை மூன்று வாசல் வழியாக தரிசக்க வேண்டும். முதல் வாசலில் சிரசை தரிசிக்கலாம். இரண்டாவது வாசலில் சரீர தரிசனம் பெறலாம். மூன்றாவது வாசலில் பாத தரிசனம் பெறலாம். கேரள கோயில் என்பதால் கமகமக்கும் சந்தனத்தை அரைத்து பிரசாதமாகக் கொடுக்கிறார்கள். இங்குள்ள ஆறு வட்டமாக இருப்பதால் இவ்வூருக்கு திருவட்டாறு என்று பெயர்.

- மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் திருக்கோயிலில் நடராஜர் சன்னதிக்கு வலப்புறம் குழந்தையை (முருகனை) இடுப்பில் ஏந்திய நிலையில் உள்ள பார்வதி அம்மனை தரிசிக்கலாம். இந்த அபூர்வக் காட்சி எங்கும் காணக் கிடைக்காதது.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com